# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

24th and 26th April 1978.
VOLUME No. CLI (Nos. 1 and 2).

©
GOVERNMENT OF TAMIL NADU
1978

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

PRICE : 1 *Rupee* ]

V211,32 N78
N78-151;2
121958

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLI (Nos. 1 and 2.)

*24th and 26th April* 1978.

TABLE OF CONTENTS.

*Monday, 24th April* 1978.


| | |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... | vii–x |
| Swearing-in of new Members ... ... .. ... | 1–3 |


*Wednesday, 26th April* 1978.


| | |
|---|---|
| 1. Election of Chairman of the Council ... ... | 5–7 |
| 2. Election of Deputy Chairman of the Council ... | 7–8 |
| 3. Felicitations to the Chairman and the Deputy Chairman ... ... ... ... ... ... | 8–57 |
| Index ... ... ... ... ... ... | 59–63 |

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். .. | i-iv |
| தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள். .. .. .. .. | v |
| தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட, பட்டியல். .. .. .. | vii-x |
| புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் உறுதி மொழி .. .. .. .. | *1-3* |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU PRABHUDAS PATWARI

*Members of the Council of Ministers.*

1. The Hon. Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Ex-Servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. The Hon. Thiru K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Ministe in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR, Minister in-charge of Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. The Hon. Thiru G. R. EDMUND, Minister in-charge of Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. The Hon. Thiru R. M. VEERAPPAN, Ministei in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. The Hon. Thiru K. KALIMUTHU, Minister in-charge of Administration, Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

9. The Hon. Thiru S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearence Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. The Hon. Thiru C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, High ways and Ports.

12. The Hon. Selvi P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including women and children's welfare, Animal Husbandry, Beggars, Home, Orphanages, Indian Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. The Hon. Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED, Minister in.charge of Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn, Handloom and Khadi and Village Industries.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

## திரு. பிரபுதாஸ் பட்வாரி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப்பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் டொறுப்பு வகிப்பார்:—

நிதி, திட்டம், வணிகவரிகள், ஆயத்துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப்ணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத்திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத்துறை, சிங்கோனா உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச்சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி, பூமிதானம்-கிராமதானம்.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்றுவாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

இடவசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார-மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.



## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மேலவைத் தலைவர்
* மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்

மேலவைத் துணைத் தலைவர்
* திரு. ஜி. சுவாமிநாதன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்
திரு. கோ. சி. மணி

மேலவைச் செயலாளர்
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்
திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்
திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்,

தலைமை நிருபர்
திரு. எஸ். நடராஜன்

* 26.4.1978 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அப்துல் வகாப், திரு. கே. எஸ். .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 2 | அறிவழகன், திரு. க., எம்.ஏ., .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 | ஆறுமுகம் திரு. சி. .. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 4 | ஆற்காடு வீராசாமி, திரு. நா. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 | இரத்தின பாலகுருசாமி, திரு. .. | நியமனம். |
| 6 | இராகவானந்தம், திரு. எஸ். .. (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 | இராமகிருஷ்ணத்தேவர், திரு. எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 8 | இராஜா முகமது, திரு. கே. .. (கைத்தறி மற்றும் ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 | இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 | எல்லமந்தா, திரு. பி., எம். ஏ., .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ., எம். ஏ., பி. எல். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 12 | சங்கரலிங்கம், திரு. எம்., எம்.ஏ, .. (எதிர்க் கட்சித் தலைவர்) | திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13 | சந்தோஷம், திரு. டி., எம். ஏ., பி. எல். .. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 14 | சிவஞானம், திரு. ம. பொ. .. (மாண்புமிகு தலைவர்) | நியமனம். |
| 15 | சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி .. | நியமனம். |
| 16 | சுந்தரேசத் தேவர், திரு. என். .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 17 [illegible], திரு. [illegible] (துணைத் தலைவர்). | தமிழ்நாடு [illegible] மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 18 [illegible], திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 19 [illegible], திரு. [illegible] பி. ஏ., பி. எல். | [illegible] உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 20 [illegible], திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 21 [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 [illegible], திரு. [illegible] | மதுரை - இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 23 தாமோதரன், திரு. [illegible] பி. எஸ்சி. [illegible] | தமிழ்நாடு [illegible] பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு. [illegible] | தமிழ்நாடு [illegible] மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 25 [illegible], திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 [illegible], திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 [illegible], திரு. [illegible] ([illegible] அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 [illegible], திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 [illegible], திரு. [illegible] | நியமனம். |
| 30 [illegible], திரு. [illegible] | சேலம் — தர[illegible] உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 [illegible] | நியமனம். |
| 32 [illegible], திரு. [illegible] | சேலம் — தர[illegible] உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 33 [illegible], திரு. [illegible] | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| [illegible], திரு. [illegible] | நியமனம். |
| [illegible], திரு. பி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| [illegible], திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| [illegible], திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆகியியர்கள். |
| [illegible], திரு. செ. | சேலம் - தர்மபுரி— கோயம்புத்தூர்— நீலகிரி ஆகியியர்கள். |
| [illegible], திரு. [illegible] | நியமனம். |
| [illegible], திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| [illegible], திரு. [illegible] | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| [illegible], திரு. [illegible] | வட ஆற்காடு - தென் ஆற்காடு ஆகியியர்கள். |
| [illegible], திரு. [illegible] | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| [illegible], திரு. [illegible] | நியமனம். |
| [illegible], திரு. ஆர். எம். (செய்தி-விளம்பரத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| [illegible], திரு. [illegible] | நியமனம் |
| [illegible] டாக்டர். [illegible] | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| வெற்றிடம் | மாநிலச் சட்ட மன்றப் பேரவை |
| வெற்றிடம் | சென்னை. உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| வெற்றிடம் | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| வெற்றிடம் | கோயம்புத்தூர் —நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 52 வெற்றிடம் .. | .. கோயம்புத்தூர் உள்ளாட்சி தொகுதி. |
| 53 வெற்றிடம் .. | .. கன்னியாகுமரி உள்ளாட்சி தொகுதி. |
| 54. வெற்றிடம் .. | .. மதுரை உள்ளா மன்றத் தொ |
| 55 வெற்றிடம் .. | .. மதுரை உள்ளா மன்றத் தொ |
| 56 வெற்றிடம் .. | .. வட ஆற்காடு உ மன்றத் தொ |
| 57 வெற்றிடம் .. | .. வட ஆற்காடு உ மன்றத் தொ |
| 58. வெற்றிடம் .. | .. தென்ஆற்காடு உ மன்றத் தொ |
| 59. வெற்றிடம் .. | .. தென்ஆற்காடு உ மன்றத் தொ |
| 60. வெற்றிடம் .. | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி ம தொகுதி. |
| 61. வெற்றிடம் .. | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி ம தொகுதி. |
| 62. வெற்றிடம் .. | .. திருநெல்வேலி உ மன்றத் தொகு |
| 63. வெற்றிடம் .. | .. திருநெல்வேலி உ மன்றத் தொகு |

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ன்ற மேலவையின் ஐம்பத்தி மூன்றாவது கூட்டத்தொடர்

## திங்கட்கிழமை, 1978 ஏப்ரல் 24.

ன்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை பத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகத் (திரு கே. எஸ். அப்துல் வகாப்) அவர்கள் தலைமையில் கூடியது.

## புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி.

ண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர்: மாண்புமிகு பினர்களே, மேலவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகிய தவிகளும் காலியாக இருப்பதால், மேலவைத் தலைவரை வை தேர்ந்தெடுக்கிற வரையில் செய்ய வேண்டிய முன் ல்களை நிறைவேற்றுவதற்கென என்னை மேலவையின் லிகத் தலைவராக ஆளுநர் அவர்கள் நியமித்தமைக்கு, ளுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கிறேன்.

தியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, நியமிக்கப்பட்டுள்ள பினர்களை நான் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்று எனது த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலவை விதியின்படி சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் வாருவருக்கும் அவையில் முதன் முதலாக தத்தம் இருக்கை அமருமுன் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 188 வது ல் விதித்துள்ளபடி உறுதிமொழி கூறி, அதில் கையொப்பமிட டும். அந்த உறுதிமொழி நிகழ்ச்சியினை நிறைவேற்றவும் நர் அவர்கள் என்னை நியமித்திருக்கிறார்கள்.

இம்மன்றத்தில் கடைபிடித்து வரும் மரபின்படி, முன்னாள் வைத் துணைத் தலைவரையும், முன்னாள் எதிர்க் கட்சித் வரையும், பின் மற்ற உறுப்பினர்களை அவர்கள் பெயர்களின் அகர வரிசைப்படியும் மேலவைச் செயலாளர் அழைப்பார். பினர்கள் மேடை அருகே வந்து, தேர்தல் சான்றிதழைச் லாளரிடம் கொடுத்து, அவரிடமிருந்து அச்சிட்ட உறுதி ழி இதழைப் பெற்று, அதன்படி உறுதிமொழி எடுத்துக் ண்டு, அதிலும், பதிவேட்டிலும் கையொப்பமிட்டு, பின்னர் க்கையில் சென்று அமரும்படி வேண்டிக் கொள்கிறேன்.

[மேலவைத் தற்காலிக தலைவர்] [1978 ஏப்ரல் 24

தற்போது புதிய உறுப்பினர்களுக்கு மேலவையில் உட்காருவதற்கு தனி இடம் ஒதுக்கப்படவில்லை. நாளை மறுநாள் உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக மேலவையில் இடம் ஒதுக்கப்படும். மேலவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் மேலவையின் விதிகளின்படி தனி இடம் உறுப்பினர்களுக்கு தலைவரால் ஒதுக்கப்படும்.

நாளை மறுநாள் மேலவைத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல்கள் இம்மேலவையில் நடைபெறும். அதற்கான வேட்புத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சட்ட மன்ற மேலவை விதிகளின்படி மேலவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலில் கலந்து கொள்பவர்களும், அவர்களின் பெயர்களை முன்மொழிபவர்களும் அதை வழிமொழிபவர்களும் தேர்தலுக்கு முன் உறுதிமொழி எடுத்திருக்கவேண்டும்.

இப்பொழுது செயலாளர் அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ள உறுப்பினர்களை அழைப்பார்,

(பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்:

(1) *திரு. ம. பொ. சிவஞானம் (த)
(2) திரு. எம். சங்கரலிங்கம் (த)
(3) திரு. எஸ். ஆறுமுகம் (த)
(4) திரு. சி. இராமலிங்கம் (த)
(5) *திரு. கே. இராமமூர்த்தி (த)
(6) திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (த)
(7) *திரு. டி. சந்தோஷம் (ஆ)
(8) திருமதி. பி. சீதாதேவி கிருஷ்ணசாமி (த)
(9) *திரு. ஏ. ஆர். தாமோதரன் (ஆ)
(10) திரு. ஏ. நல்லசிவம் (த)
(11) *திரு. ஜே. எம். மியாகான் (ஆ)
(12) திரு. கே. மீனாட்சிசுந்தரம் (த)
(13) திரு. செ. முத்துசாமி (த)
(14) திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (த)

(செயலாளர் அவர்கள் திரு. ஜி. வசந்த பை அவர்களை அழைத்தார்கள். திரு. ஜி. வசந்த பை அவர்கள் அவையில் இல்லை.

(15) *திரு ஈ. எஸ். வெங்கடேசன்(த)
(16 டாக்டர் எச். வி. ஹண்டே (த)



1978 ஏப்ரல் 24]

மாண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர்: அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 26ஆம் தேதி காலை 10 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 4-22.)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(*) கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

(த) தமிழில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட உறுப்பினர்கள்.

(ஆ) ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

### புதன்கிழமை, 1978 ஏப்ரல் 26

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. சட்ட மன்ற மேலவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு தற்காலிகத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவையின் இன்றைய அலுவல் இந்திய அரசியலமைப்பின் 182-வது பிரிவின்படி மேலவைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுப்பதாகும். அப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள் செயலரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலவை விதி 4, துணை விதி (4)ன்படி தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும், அவரை முன்மொழிந்தவர் பெயரையும் வழிமொழிந்தவர் பெயரையும், இவ்வவையில் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு :—

| | | |
|---|---|---|
| வேட்பாளரின் பெயர் | : | திரு. ம. பொ. சிவஞானம். |
| முன்மொழிந்தவர் | : | திரு. கே. இராஜா முகமது. |
| வழிமொழிந்தவர் | : | திரு. இராம. வீரப்பன். |

ஆக, ஒரே ஒரு வேட்பாளர் பெயர் மட்டுமே மேலவைத் தலைவர் பதவிக்கு மொழியப்பட்டிருப்பதால், நான் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இம்மேலவையின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம்.)

இத்துடன் எனது அலுவல் முடிவடைகிறது. இப்பொழுது மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் முஸ்லீம் லீக் கட்சியினுடைய பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் நான் சிலம்புச் செல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இன்றைக்குச் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள், பெருமை பெற்றிருக்கிறார்கள் என்றால், அது தமிழுக்குக்

கிடைத்த பெருமை. அவர் தமிழ்ப் பெரியார். தமிழ்த் தாய் என்று ஒன்று இருக்குமானால் அந்தத் தாய் இந்தக் காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்தேன். ஏழைக் குடும்பத்தில் பிறந்து சிறு பிராயத்தில் நெசவாளராக வேலை செய்து, அச்சுத் தொழிலாளியாக இருந்து, இன்றைக்கு மேலவைத் தலைவராக வந்திருக்கிறார்கள் என்றால், அவர் உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்று சொல்வேன். அவரை நினைக்கும் போது, எனக்குத் தலைவர் காமராஜர் நினைவுக்கு வருகிறார், அவரும் குறைவாகப் படித்த நிலையில் உழைப்பால் உயர்ந்து முதலமைச்சர் நிலைக்கு வந்து பெருமைப்பட்டவர்கள். அத்தகைய நல்ல நிலைக்கு வந்துள்ள தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன். சிலம்புச் செல்வர் அவர்கள் எத்தகைய பேச்சாளர் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. இன்றைக்கு வாழ்கிற தமிழில் பேசக்கூடிய தலைசிறந்த பேச்சாளர்களில், நான்கைந்து பேர்களில் அவர் தலை சிறந்தவர் என்று சொன்னால், மிகையாகாது. அவர் பேசும்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவு வரும். அண்ணா பாணியில் பேசும் ஆற்றலும் திறமையும் சிலம்புச் செல்வருக்கு உண்டு என்று சொன்னால், அதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று திடமாக நம்புகிறேன், வானத்தில் நட்சத்திரங்கள் நிறைந்திருக்கின்றன. ஒரே ஒரு சந்திரன் இருக்கிறது. அதைப்போல சிலம்புச் செல்வர் அவர்கள் பல சிறப்புக்களைப் பெற்றிருந்தாலும், இன்றைக்குப் பெற்றிருக்கும் சிறப்பு வானத்தில் உள்ள சந்திரனைப் போன்றது, உச்ச கட்டத்திலுள்ள சிறப்பு என்று சொல்லி நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய எதிர்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சார்ந்த கட்சியும் இந்தத் தேர்தல் ஏகமனதாக நடக்கவேண்டுமென்று நடந்துகொண்ட பெருந்தன்மைக்காக நான் பாராட்டுகிறேன். தலைவர் அவர்கள் இந்த ஸ்தானத்தில் உட்கார்ந்துவிட்டால், கட்சி சார்பற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்பது மரபு. ஒரு பெரியார் இதற்கு உதாரணமாகச் சொல்லியது என் நினைவுக்கு வருகிறது. கோவிலுக்கு, பள்ளிவாசலுக்குச் செருப்பு போட்டுக்கொண்டு சென்றால், அதை வெளியே போட்டுவிட்டு உள்ளே செல்கிறோம். மறுபடியும் வெளியே வரும்போது, செருப்பை மாட்டிக் கொண்டு வருகிறோம். அதைப்போல இந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்தக் கட்சியை விட்டுவிட்டு வந்து அமர வேண்டும். வெளியே போகும்போது, அவர்கள் கட்சியில் இருந்து கொள்ளலாம். மற்றொன்று நான் சொல்ல விரும்புவது, எல்லா உறுப்பினர்களையும் சமமாக நினைக்கவேண்டும். இதைச் சொல்லும்போது முன்பு இங்கே தலைவராக இருந்த பெரியவர் மகாராஷ்டிராவில் கவர்னராக இருந்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள்



சொன்னது நினைவுக்கு வருகிறது. இந்தச் சபையில் பெருமிதத்துடன் ஒன்றைச் சொல்கிறேன் என்று சொல்லி, ''இங்கே 63 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த 63 பேரில் ஒவ்வொருவரும் எனக்கு ஆப்த நண்பர்கள். எவரிடமும் பாகுபாடு இல்லை, பாரபட்சம் இல்லை'', என்று சொன்னார். அதைப் போல நம்முடைய தலைவர் அவர்கள் எல்லா உறுப்பினர்களையும் ஆப்த நண்பர்களாக மதித்துப் பழகி யாரிடமும் பாரபட்சம் இல்லாமல் நடப்பதற்கு வழி காட்டியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, நீண்ட நாட்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் அவர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

இப்போது மேலவைத் தலைவர் அவர்களை அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்கள் தம் இருக்கைக்குச் சென்று அமரும் வரை உறுப்பினர் அனைவரும் எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிறகு அவை முன்னவரும் எதிர்க் கட்சித் தலைவரும் அவைத் தலைவரை அவரது இருக்கைக்கு அழைத்து வந்தனர்.)

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: மாண்புமிகு உறுப்பினர்களே, இந்த மேலவையின் தலைவராக என்னை ஒருமனதுடன் தேர்ந்தெடுத்தமைக்காக கைகூப்பி வணங்கி என்னுடைய நன்றியறிதலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. <u>சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் தேர்தல்.</u>

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: எனது முதல் அலுவல் துணைத் தலைவர் அவர்கள் தேர்தலை நடத்தி வைப்பதாகும். அது முடிந்தவுடன் பாராட்டுரை வழங்கப்படும்.

<u>மேலவைத் துணைத் தலைவர்</u> பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள் ஏற்கனவே செயலாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலவை விதி 5, துணை விதி (4)-ன் படி, துணைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும், அவரை முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களையும் இவ்வவையில் நான் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு:—

வேட்பாளரின் பெயர் : திரு. ஜி. சுவாமிநாதன்.

முன்மொழிந்தவர் : திரு. ஏ. ஆர். தாமோதரன்.

வழிமொழிந்தவர் : திரு. டி. வி. டிமாண்டி.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1978 ஏப்ரல் 26

ஒரே ஒரு வேட்பாளரின் பெயர் மட்டுமே மேலவைத் துணைத் தலைவர் பதவிக்கு மொழியப்பட்டிருப்பதால், நான் திரு. சுவாமிநாதன் அவர்கள் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கிறேன். அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களை, தமக்கு உரிய இடத்தில் வந்து அமருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் திரு. ஜி சுவாமிநாதன் அவர்கள், துணைத் தலைவர் இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

## 3. மேலவைத் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் பாராட்டுரை பகர்தல்

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முதலில் மாண்புமிகு மேலவை முன்னவர் பாராட்டுரை வழங்குவார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர், மற்ற கட்சித் தலைவர்கள் பாராட்டுரை வழங்கியபின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டுரை வழங்குவார்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் நன்றியுரைக்குப் பின்பு எனது உரை அமையும்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமும், வரலாற்றுப் புகழும் மிக்க இந்த மேலவைக்குத் தலைவராக, ஏகமனதாக அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் பல்வேறு தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கபபட்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதைப் போலவே மாண்புமிகு மேலவைத்துணைத் தலைவராக, திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு தலைவர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும், இந்த அவையின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டுவதற்கான வாய்ப்பைப் பெற்று நான் இங்கே நிற்கிறேன்.

இந்த இனிய நேரத்தில் பல்வேறு நினைவுகள் நம் நெஞ்சில் சுழன்று வருவதைப் பார்க்கிறேன். இந்த மேலவை, இதனுடைய பெருமை, வரலாறு ஆகிய இவைகளை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த இடத்திற்குத் தகுந்த ஒரு பெரும் தலைவரை, இன்றைக்கு நாம் தலைவராகப் பெற்றிருக்கிறோம் என்று மகிழ்ச்சி மேலோங்கி நிற்கிறது. 'இதற்கு முன்பு இங்கே தலைவர்களாக வீற்றிருந்தவர்களைவிட வயதிலும் மூத்த தலைவராகத் தாங்கள்



1978 ஏப்ரல் 26] [திரு. கே. இராஜா முகமது]

இங்கே வந்து அமர்ந்திருக்கிறீர்கள். அதைப் போலவே மேலவைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலேயே, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, சிறைச்சாலைக்குச் சென்று, சிறைச்சாலைக் கொடுமைகளை அனுபவித்து வெளியே வந்து இன்றைக்குத் தலைவர்களாக இருப்பவர்களில் முதல் தலைவரும் தாங்கள் தான் என்று நினைக்கிறபோது, உண்மையிலேயே மிகுந்த பெருமையும் பூரிப்பும் ஏற்படுகிறது.

இந்த அவையைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தில் ''எல்டர்ஸ் ஹவுஸ்'' என்று குறிப்பிடுவார்கள். முதியவர்களின் அவை என்பார்கள். முதியவர்கள் என்று சொல்லுகிறபோது, அறிவால் முதியவர்கள் என்று நான் எடுத்துக் கொள்கிறேன். அறிவால் முதியவர்களாக இருப்பவர்களின் அவையில் தாங்கள் அறிவாலும், வயதாலும், அனுபவத்தாலும் முதுமை பெற்றிருக்கிற காரணத்தால், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உள்ளபடியே மிகவும் பொருத்தமாக இருக்கிறது,

[முற்பகல் 10.10]

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன். நாடுகளினுடைய வரைபடத்தைப் பார்க்கிறபோது, ஆஸ்திரேலியாவைப் பார்த்தால், அந்த ஆஸ்திரேலியாவைக் கண்டம் என்றும் சொல்லலாம்; தீவு என்றும் சொல்லலாம். அதைப் போல் இன்றைக்கிருக்கிற தலைவர்களில் தங்களை அரசியல் தலைவராகவும், தமிழ் அறிஞராகவும், பெரும் புலவராகவும் சன்மார்க்க நெறிகளைப் பேணிப் பாதுகாக்கிற சிறந்த சிந்தனையாளராகவும் பல்வேறு தகுதிகளைப் பெற்றிருக்கிற தாங்கள் இந்த அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதென்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இன்றைக்கு உங்களுக்குப் பதவி வந்திருக்கிறது என்றோ, அந்தப் பதவியை எதிர்பார்த்து நீங்கள் அதைப் பெற்றீர்கள் என்றோ நான் கருதவில்லை. அதைப் போலவே உங்களுடைய உணர்வின் அடிப்படையில் உங்களுக்கு எது எது பிடிக்கும், எது எது பிடிக்காது என்று மதிப்பிட நான் விரும்பவில்லை. ஆயினும், நான் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். தங்களுக்கு எது பிடிக்கிறதோ இல்லையோ, ஒன்று மட்டும் நிச்சயமாகப் பிடித்திருக்கிறது. அதுதான் ''எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்'' என்பதாகும். தேமதுரத் தமிழோசை தெருவெங்கும் முழங்கச் செய்திட வேண்டும் என்ற கொள்கை உங்களுடைய உணர்வோடு கலந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, அந்த உணர்வுக்கு மதிப்புத் தருகிற வகையில் இந்த மாநிலத்து $4\frac{1}{2}$ கோடி மக்கள் சமுதாயத்தையும் நினைத்துப் பார்த்து இந்த அரசு எவ்வளவு பெரிய பொறுப்பை நிறைவேற்றி இருக்கிறது, தங்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், என்பதையும் எண்ணிப் பார்த்து, தமிழ்ச் சமுதாயத்திற்கு நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

[திரு. கே. இராஜா முகமது] [1978 ஏப்ரல் 26

இன்றைய தினம் உங்களை அரியணையில் ஏற்றி அமர்த்தி வைத்திருக்கிறோம் என்றால் சிலப்பதிகாரத்தை அரியணையில் அமர்த்தி இருக்கிறோம் என்ற பெருமிதம்தான் ஏற்படுகிறது. கற்பு போற்றும் பொற்புடைய தெய்வமாக விளங்கிய கண்ணகியினுடைய வீர காப்பியத்தை எழுதிய இளங்கோவடிகள் தமது அரச பதவியைத் துறந்து அந்தக் காப்பியத்தை உருவாக்கினார்கள். ஆனால், அந்தக் காப்பியத்தை, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை, அதனுடைய பெருமைகளை சமுதாயத்தின் சாதாரண குடிமகனும் உணர்ந்து கொள்ளும் வகையில் சமுதாய ஒழுக்க நெறிகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறையோடு நீங்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் தமிழ்ச் சமுதாயம் கேட்டுக் கேட்டு, அந்தப் பெருமையை உணர்ந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில், உங்களுடைய அந்தப் பணிக்காக இன்றைக்கு நீங்கள் இந்தப் பெரும் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். துறவியாகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்தார். ஆனால், இன்றைக்கு இருக்கும் அரசோ உங்களை அரசவையில் அவைத் தலைவராக்கி, உங்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அமர்த்தி வைத்திருக்கிறார்கள் என்கிறபோது, இந்தக் காட்சியைக் காண்கிறபோது நெஞ்சம் பூரிப்பு அடைகிறது. இப்படிப்பட்ட நல்ல காரியம், நல்ல நிகழ்ச்சி நடைபெற வேண்டும் என்று தமிழ்ச் சமுதாயம் வெகுநாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியை இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணுகிறபோது, உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உங்களுடைய பணி எவ்வளவு பொறுப்பு மிக்கது என்று நான் சொல்லி மற்றவர்களும் நீங்களும் உணர்ந்துகொள்ளத் தேவையில்லை. உங்களைப்பற்றி உலகில் எல்லோரும் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றுவரை, 72 வயதாகியும் தொடர்ந்து நீங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். பேசிக் கொண்டிருக்கிறீர்கள். சமுதாயத்திற்கு நல்ல கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். 97-க்கும் மேலாக தமிழ் நூல்களை எழுதியிருக்கிறீர்கள். ஒவ்வொரு வகையான பொருளை எடுத்துக் கொண்டு, சமுதாய நன்மைக்காக, தங்களின் உழைப்பை நல்கி வருகிறீர்கள். அதில் உங்களுக்கு இருக்கிற ஆர்வத்தை நினைத்து, நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தற்போது கோடை காலம் என்பதால், ஒன்று என் நினைவுக்கு வருகிறது. கோடை காலத்தில் நீங்கள் நீரூற்றுகளைப் பார்த்தால் மேலே உள்ள நீரின்மீது கையை வைத்தால், அது சுடும். ஆனால் நீரை விலக்கிவிட்டு உள்ளே பார்த்தால், அங்கே தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். அதைப் போல் தங்களிடத்தில் கண்டிப்பு நிறைந்து உண்டானாலும், கனிவு நிரம்ப இருக்கிறது என்பதையும் நான் கண்டிருக்கிறேன். இந்த அவையின் தலைவர் பொறுப்பில்



1978 ஏப்ரல் 26] [திரு. கே. இராஜா முகமது]

இருக்கிறபோது நிரம்ப கண்டிப்புத் தேவைப்படுகிறது. காரணம், பல்வேறு பொறுப்புகளை நிறைவேற்றும்போது, கண்டிப்புத் தேவைப்படுகிறது. இருந்தாலும், கோடைக்காலத்து நீர் ஊற்றைப்போல் தங்கள் உள்ளத்தில் நிரம்ப குளிர்ச்சி இருக்கிறது. என்பதை எண்ணும்போதும், பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. இன்றையதினம் நீங்கள் இங்கே சமரசத் தலைமையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இங்கே ஒரு பெரிய சிறப்பு எந்தக் கட்சியும் தங்கள் கட்சி உணர்வைக் காட்டிக் கொள்ளாமல் பெருந்தன்மையோடு இந்தப் புதிய பாரம்பரியத்தை நிலை நாட்டியிருக்கிறது. ஆளும் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும், மற்றவர்களும் தங்களைப் போட்டியின்றி தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் தங்களின் நல்லுணர்வைக் காட்டியிருக்கிறார்கள். இது தமிழக அரசியல் வரலாற்றிலேயே ஒரு புதிய முன்மாதிரியை உருவாக்கியிருக்கிறது என்று எண்ணும்போது, இந்த முன்மாதிரி இனித் தொடர வேண்டும், அதுவும் உங்களுடைய தலைமையில் அந்தப் பெரும் பயணம் அரசியலில் தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஏற்கெனவே சமரச சன்மார்க்கத்தை உருவாக்கித் தந்த வள்ளலாரைப் பற்றி "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற அரிய நூலை அளித்திருக்கிறீர்கள். இன்றையதினம் நீங்கள் சமரசத் தலைவராக அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். எல்லோருக்கும் சமரசம் செய்து வைப்பவராக, எல்லோருக்கும் சமரசமாக வேண்டியவராக இருக்கும் வகையில் தாங்கள் இந்தப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள். தங்களுடைய காலத்தில் பெரும் நன்மைகள் தமிழகத்திற்குக் கிடைக்கும், பல நல்ல திட்டங்களை இந்த மாமன்றம் விவாதித்து உங்களுடைய வழிகாட்டும் தலைமையின் கீழ் நிறைவேற்றிக் கொடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எல்லாவற்றையும்விட நீங்கள் தமிழைப் போல் என்றும் இளமையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். என்னுடைய வயதைச் சொல்லுகிறபோதுதான் எனக்கு முதுமை தெரிகிறது என்று நீங்களே ஒரு முறை சொல்லியிருக்கிறீர்கள். உங்களிடம் இருக்கிற இளமையின் காரணம், ரகசியம் எனக்குத் தெரியும். தமிழ் உணர்வு தங்களிடம் எப்போதும் இருப்பதால், தமிழைப் போன்றே இளமையும் தங்களிடம் தொடர்ந்து நீடிக்கிறது. தமிழ் உணர்வு யாரிடத்தில் தொடர்ந்து இருக்கிறதோ அவர்கள் தொடர்ந்து இளமையாகவே இருப்பார்கள், காரணம், நாம் தமிழைக் கன்னித் தமிழ் என்கிறோம். சீரிளமை குன்றாத செந்தமிழ் என்கிறோம். ஆகையினால், அந்த உணர்வு கொண்டவர்கள் இளமையோடுதான் இருப்பார்கள். அந்த வகையில் நீங்கள் நிரம்ப தமிழ் உணர்வோடு இருப்பதால், எப்போதும் இளமையோடு காணப்படுகிறீர்கள். உங்களை எப்படிப் பார்த்தாலும், எந்தக் கோணத்தில் பார்த்தாலும், எல்லாவற்றிற்கும் பொருந்தக்கூடிய ஒரு தனித் தகுதி,

திறமை இருப்பதை நாங்கள் காண்கிறோம். நான் இங்கே அவைக்கு வருகிறபோது நினைத்துக் கொண்டே வந்தேன், இன்றைக்கு ஏதாவது ஒன்றைப் புதுமையாகச் சொல்ல வேண்டும் என்று. அப்போது எல்லை காந்தி கபார்கான் அவர்கள் நினைவுக்கு வந்தார். அவரை எல்லைப்புறத்து காந்தி என்று சொல்வதைப்போல் நீங்கள் எல்லைப்புறத்துக் காவலராக இருக்கிறீர்கள். எல்லைப் புறத்தை பாதுகாக்க நடைபெற்ற போராட்டத்தை நினைத்துப்பார்க்கிறபோது, திருத்தணியும், திருப்பதியும் அங்கே உள்ள கடவுள்களும் நினைவுக்கு வருவதைப்போல் திரு. ம. பொ. சி. அவர்களும் நினைவுக்கு வருகிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு மிகப் பெரிய காரியங்களை, தமிழ் மொழிக்காக, தமிழ் கலாசாரத்திற்காக, தமிழ்ப் பண்பாட்டிற்காக தமிழ் மொழியைக் காக்க வேண்டும், தமிழகத்தின் எல்லையைக் காக்க வேண்டும், தமிழக எல்லைப் பகுதிகளை மீட்க வேண்டும் என்ற காரணத்திற்காக பல தியாகங்களைச் செய்திருக்கிறீர்கள்.

சாதாரண நிலையிலிருந்து வளர்ந்து வந்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், பேசிக்கொண்டே இருக்க விரும்புகிறேன். காரணம், எனக்கு ஒருவகையிலே இதில் பெருமை இருக்கிறது. நீங்கள் சாதாரண நெசவுத் தொழிலாளியாக இருந்திருக்கிறீர்கள். அதிலிருந்து இன்றையதினம் அவைத் தலைவராக ஆகியிருக்கிறீர்கள். எனவே, நெசவுத் தொழில் அமைச்சர் என்ற முறையில் எனக்கு இது பெருமையாக இருக்கிறது. இதைப் பல லட்சக்கணக்கான நெசவாளர் பெருமக்கள் அறிந்து பூரிப்பு அடைகிறார்கள்.

இந்த அளவுக்கு எல்லா வகையிலும் சிறப்புற்ற தாங்கள் இன்றைக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். எனவே, மீண்டும் இந்த அவையின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், புரட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும், என்னுடைய சார்பிலும், அமைச்சரவையின் சார்பிலும் என்னுடைய பாராட்டுதல்களை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மேலவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு திரு ஜி. சுவாமிநாதன் அவர்களைப்பற்றி உறுப்பினர்கள் அனைவரும், மற்றும் உள்ள அனைவரும் நன்கு அறிவர். அவருடைய திறமையை நாம் எல்லாம் நன்கு அறிவோம். பல்வேறு துறைகளிலும் அவர் திறமை பெற்றவர். குறுகிய காலத்தில் நான் பார்த்ததைச் சொல்லுகிறேன். எந்தத் துறையாக இருந்தாலும், அதில் புள்ளி விவரத்தோடு தெளிவாகத் தன் கருத்தைச் சொல்வார். ஏதோ சொல்ல வேண்டுமென்ற காரணத்திற்காக எதையும் சொல்ல மாட்டார். (Man of Conviction) தெளிவாக ஒரு கொள்கையை வைத்துக்கொண்டு பிரச்சினைகளை அணுகுவார். ஒரு கொள்கையை



ஏற்றுக் கொண்டால், மனதார நம்பி சுதந்திர உணர்வோடு அந்தப் பிரச்சினை குறித்து கருத்துக்களை எடுத்துச் சொல்வதை நான் பார்த்திருக்கிறேன்.

[முற்பகல் 10-20]

பாராட்ட வேண்டியது என்றால் அதைப் பாராட்டுவதும், விமர்சிக்கவேண்டியது என்றால் அதை விமர்சிப்பதும் அவர் இயல்பாகும். விமர்சனம் செய்யவேண்டுமென்பதற்காக மட்டும் அவர் எடுத்துச் சொல்வதில்லை. அவர் விமர்சனத்தினால் நன்மைகளைப் பயக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு எடுத்துச் சொல்வார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற இளைஞராக அவரை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட அவர்கள் இன்றைக்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பி. பார்மசி பட்டம் பெற்றவர்கள். அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல சொற்பொழிவாற்றக் கூடியவர்கள் என்பது பல பேர்களுக்குத் தெரியும். சிலருக்குத் தெரிந்திருக்க முடியாது என்பதால், நான் இங்கு அதை எடுத்தச் சொல்ல விரும்புகிறேன். இன்று துணைத் தலைவராக இருக்கும் அவர்களின் அரசியல் ஆரம்பமே தமிழரசுக் கழகம் தான். அன்று உங்களைத் தலைவராக ஏற்றுத் தொண்டனாகப் பணியாற்றிய அவர்கள், இன்று இருவரும் குருவும் சிஷ்யனுமாக பொறுப்பேற்றுக்கொண்டிருப்பது என்பது, தலைவரவர்களே, இது எங்களுக்கு எவ்வளவோ மகிழ்ச்சிகரமான செய்தியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அவர்கள் உங்களுக்கு சிஷ்யனாக உள்ளார்கள். தங்களுக்கு அவர்கள் பல்வேறு வகையிலே உதவியாக இருப்பார்கள் என்று சொல்லும்போது, தங்களுக்குப் பணியாற்றக்கூடிய வாய்ப்பு நன்கு அமைந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. சுவாமிநாதன் அவர்களும் மேலும் சிறப்பாக பணியாற்றுவதற்கு நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு, அவர்கள் பணியாற்றுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையின் சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களின் சார்பாகவும், தமிழ் போல இளமை மாறாது, இளமை வளம் குன்றாது, தலைவர் அவர்கள் தொடர்ந்து இளமை உணர்வோடு வாழவேண்டும் என்று வாழ்த்தி விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையின் தலைவர் என்ற பெரும் பொறுப்புக்குப் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்

பட்டு, எல்லோரும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு இருந்து கொண்டிருக்கிறோம். இன்று அவையின் முன்னவர் அவர்கள் தெரிவித்த எல்லாக் கருத்துக்களையும் நானும் ஒரு சேர ஆதரித்து என்னுடைய பராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் சொல்ல விரும்பினாலும், தங்களுக்கு வாழ்த்துச் சொல்வதற்கு எனக்கு வயது பக்கத்தில் இல்லையே என்ற அச்சமும் இருக்கிறது.

திரு க. அறிவழகன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு மீசை இருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : அந்தத் தகுதியை அங்கத்தினர் திரு. அறிவழகன் வழங்கியதற்குப் பாராட்டுகிறேன். அப்படிப் பட்ட நிலையிலும், அதே சமயத்தில் பற்றோடும், பாசத்தோடும் நான் தங்களைப் பாராட்டுகிறேன்.

தலைவரவர்களே, தங்களோடு கழிந்த 30 ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு உடையவன் .என்ற நிலையில், 1948ல் விடுதலைப் போரில், இந்த நாடு தழுவிய இயக்கத்தை நீங்கள் நடத்திச் சென்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்தைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்று தமிழ் உணர்வோடு நடத்திய விடுதலைப் போரைத் தொடங்கி, அதற்கு நீங்கள் தலைமை தாங்கி வழி நடத்தியபோது நான் தொண்டனாக இருந்தவன் என்ற அளவிலும் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். 20 ஆண்டுகளாக அந்தப் போர் நடந்தது. 1947-லே தொடங்கினோம். 1956 வரை அதைத் தொடர்ந்து நடத் தினோம். அதிலே நான் ஒரு தீவிரத் தொண்டனாகப் பணியாற் றினேன். உங்களுடைய தலைமையை ஏற்று இன்றும் இந்த அவையில் இணைந்தவனாக, நானும் ஒரு உறுப்பினனாக அமர்ந்து தங்களைப் பாராட்டுகின்ற பேறு பெற்றமைக்காக நான் உண்மையி லேயே மகிழ்ச்சி அடைகின்றேன். என்னுடைய நெடிய 30 ஆண்டுக் காலமாக தொடர்ந்த பழக்கம், என்றுமே உங்களுடைய சொற்பொழிவுகளை எல்லாம், உங்கள் தமிழ் உணர்வை எல்லாம், தமிழ்ப் பற்றை எல்லாம் எனக்கு எப்போதும் நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றது. அத்தகைய தமிழுணர்வைப் பெற்ற ஒருவரை நம் மன்றத்தில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் ஒரு சாராக, ஒரு மனதாக அமர்த்தியிருக்கின்றன. அந்தப் பொறுப்புக்களை எல்லாம் மனதில் கொண்டு, இந்த அவையி னுடைய மரபுகளுக்கு ஏற்ப சிறப்பாக நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். நாங்கள் அந்த நம்பிக்கையை அழுத்தமாகக் கொண்டிருக்கிறோம் என்பதன் அடையாளமாகத்தான் எல்லோரும் உங்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்பதைக் கூறி, நான் என்னுடைய பாராட்டுதலைக் கூறிக்கொள்கிறேன். தாங்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டைப்பற்றி நான் சொல்லித் தெரியவேண்டிய நிலை இல்லை. இந்த நாட்டிற்கே தெரியும். மாண்புமிகு முன்னவர்



அவர்கள்கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். தலைவர் அவர்கள் 97 புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள் என்று சொன் னார்கள். 9 ஆயிரத்திற்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை உள்ளங்களில் புத்தகமாகப் படித்திருக்கிறோம். அந்தச் சொற் பொழிவுகள் எல்லாம் தமிழுணர்வை தமிழ் மக்கள் மத்தியிலே உருவாக்கியிருக்கின்றன என்பதை நான் அறிவேன். அத்தகைய தமிழுணர்வு பெற்ற ஒருவர், தமிழ் மொழி எல்லா நிலைகளிலும் ஆட்சி பீடத்தில் அமர்த்தப்பட வேண்டுமென்ற உணர்வு பெற்ற ஒருவர், அதற்காகப் போராடிய ஒருவர், தமிழகத்தில் குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் இந்த அவையில் தலைவராக அமர்ந்திருப்பதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையைப் பொறுத்த அளவிலே, இது சட்ட மன்ற மேலவை என்று சொன்னாலும், . இதை இரண்டாவது அவை அல்லது 'செகண்ட் சேம்பர்' என்று சொல்பவர்கள் உண்டு. இந்த அவைக்கு முக்கியத்துவம் இல்லை என்ற கருத்து இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்திலே இன்றைக்கு நிதி அதிகாரம் இல்லாமல் போனாலும் கூட, நீதி அதிகாரம் இருப்பதாகத்தான் சொல்ல வேண்டும். அந்த அளவில் கருதி ஆட்சியில் இருப்பவர்களும். எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் இங்கே நடக்கின்ற விவாதங்களில் கலந்துகொள்ள வேண்டும். நீதியின் அடிப்படையிலே இந்த நாடு நிலைபெறவேண்டிய வழியில் நடத்திச் செல்ல வேண்டும். இந்த அவை எல்லோ ராலும் பாராட்டப்பட்ட பாரம்பரியத்தை உடையது. அப்படிப்பட்ட இந்த அவையிலே தாங்கள் தலைவராக இருப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியினை அளிக்கின்றது. இந்த அவையிலே திரு. இராஜாஜி அவர்களும் சென்ற முறை சிந்தனைச் சிற்பி திரு. சி. பி. சிற்றரசு அவர்களும் இருந்தார்கள். 10 பேர் களுக்கு மேற்பட்ட பேரறிஞர்கள் வீற்றிருந்தார்கள். அவர்கள் எல்லாம் இருந்து நடத்தி, பெருமையைத் தேடித்தந்திருக் கிறார்கள். அந்தப் பாரம்பரியத்தில் வந்த ஒருவராக, பிரதி நிதியாக நீங்களும் அமர்ந்து இந்த அவையின் பெருமையை உயர்த்தி, இந்த அவையின் நடவடிக்கைகளை ஜனநாயக முறையில் நடத்தி, மற்ற பிற அவைகளுக்கும் நல்ல வழி காட்டியாக அமைகின்ற அளவுக்கு உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உருவாக்கித் தருவீர்கள் என்றும் நான் நம்புகிறேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில், உங்கள் பெயரைச் சொல்லிய உடனே தலைவர் டாக்டர் கருணாநிதி அவர்கள் தங்களைப் போட்டியின்றித் தேர்ந் தெடுக்க வேண்டும் என்ற உணர்வைத் தெரிவித்தார்கள். அந்தக் கட்டளையை எனக்கும் அவர் பிறப்பித்து, தங்களை இந்த அவையின் தலைவராக அமர்த்த விரும்பினார். அதற்குக் காரணம் அவருக்குத் தங்களிடமும், தமிழ் மக்களிடமும் உள்ள பற்றும், தங்கள்பால் அவர் வைத்திருக்கின்ற மதிப்புந்தான் என்பதை நான் இந்த அவையிலே சுட்டிக் காட்ட விழைகிறேன்.

[திரு. எம். சங்கரலிங்கம்] [1978 ஏப்ரல் 26

இந்த அவையினுடைய பாரம்பரியத்தைப்பற்றி நினைக்கும் போது, 1964—லே இந்த அவையிலே நான் உறுப்பினராக வந்தபோது, இந்த அவையினுடைய தலைவராக திரு. மாணிக்க வேலு நாயக்கர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்போது உறுப்பினர்கள் பலர் பாராட்டிப் பேசினார்கள். அப்படிப் பாராட்டிப் பேசிய பெரியவர்கள், இந்த அவையின் முன்னவர், திரு. வெங்கட்ராமன் அவர்கள், எதிர்க் கட்சித் தலைவராக இருந்த டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள். அவர்கள் எல்லாம் இந்த அவையில்தான் பாராட்டிப் பேசினார்கள். அப்படிப் பாராட்டிப் பேசுகின்ற உரைகளைக் கேட்கின்ற பேற்றை நானும் பெற்றேன். அதற்குப் பிறகு பலர் பாராட்டிப் பேசினார்கள். வயது முதிர்ந்த வழக்கறிஞர் திரு. கே. பால சுப்பிரமணியம் அவர்கள் கூட பாராட்டிப் பேசினார்கள். இந்த அளவுக்குப் பெருமைமிக்க பெரியவர்கள் எல்லாம் இருந்து இந்த அவைக்கு இருக்கின்ற பெருமையை உயர்த்தினார்கள். இவைகளெல்லாம் இப்போது எனக்கு நினைவுக்கு வருகின்றது. இந்த அவையினுடைய பெருமைகளைப் பற்றி நமது அங்கத்தினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் எடுத்துக்காட்டிப்பேசியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

அவர்களும் அந்தப் பொறுப்பை ஏற்று எங்களுக்கெல்லாம் பதவிப் பிரமாணம் செய்து வைத்து, இந்தத் தேர்தலையும் சிறப்பாக நடத்தி, உங்களையும் தேர்ந்தெடுத்து பணியை முடித்தமைக்காக அவரையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் இந்த அவையினுடைய தலைவர் பொறுப்பைப்பற்றிச் சொல்லும் போது, ஓர் உதாரணத்தைச் சொன்னார்கள். அந்த உதாரணத்தைப் பலர் ஏற்றுக்கொள்ளாது இருந்தாலும், அவர்கள் சொன்ன கருத்து சீரிய கருத்து என்பதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியாது. அந்தக் கருத்து, ''இந்த அவையினுடைய தலைவர் பொறுப்புக்கு வருகிறவர்கள், அதற்கு முன்னால் எந்தக் கட்சியில் இருந்தார்கள் என்பதை மறந்துவிட வேண்டும்'' என்பதுதான். மறந்துவிட வேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்ன உதாரணத்தைச் சில நண்பர்கள் கொஞ்சம் வருத்தத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். கட்சியை நாம் மிகப் பெரியதாகக் கருதி, அந்தக் கட்சிக்காக நம்முடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதால் அந்த உதாரணத்தை நம்மில் சிலரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்னைப் பொறுத்த அளவில், அவருடைய உதாரணம் சிறப்பிழந்ததாகத் தெரியவில்லை. இந்தத் தலைவர் பதவிக்கு வந்ததற்குப் பிறகு, அந்தக் கட்சியை அப்படிக் கருத வேண்டுமென்று கருதினார்கள் போலும் என்று நினைக்கிறேன். இந்தப் பதவிக்கு வருகிறவர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும், அன்றே அந்தக் கட்சியை



1978 ஏப்ரல் 26] [திரு., எம். சங்கரலிங்கம்]

மறந்துவிட்டு, அந்தக் கட்சியிலுள்ள பொறுப்பை விட்டுவிட்டு கட்சிக்கு அப்பால் இருந்து இங்கேயிருக்கிற கட்சிகளை வழி நடத்தி, அவர்களுடைய கருத்தை இந்த நாடறிய, சிறப்புற வழிகாட்ட வேண்டுமென்று கூறினார்கள். அந்தக் கருத்தைத் தாங்கள் ஏற்று நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உண்டு. அந்த நம்பிக்கைதான் உங்களைப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கிற துணிவை எங்களுக்குத் தந்தது.

நீங்கள் நாட்டுக்கு அறிமுகப்படுத்தியது சிலப்பதிகாரம். படித்த அறிஞர்கள் மத்தியில் மாத்திரம் பேசப்பட்டிருந்த சிலப்பதிகாரத்தை பாமர மக்கள் மத்தியிலும், இந்த நாட்டில் பிறந்த தமிழ் மக்கள் உள்ளத்திலும் கொண்டு நிறுத்தியவர் நீங்கள். தன் கோல் வளைந்தது என்ற செய்தியைக் கேட்டவுடன் அந்தச் செய்தி பிறர் காதில் செல்வதற்கு முன்னால் தன் உயிர் நீத்து, வளைந்த செங்கோலை நிமிர்த்தினான் பாண்டியன் நெடுஞ்செழியன். அந்த அளவுக்கு செங்கோல் நடத்திய சிறப்பை, ஒருபால் கோடா சான்றாண்மையை தாங்கள் நாடெங்கும் பரப்பி மிகச் சிறப்பாக தமிழ் மக்களின் உணர்விலும், இரத்தத்திலும் கலந்து கொள்ளச் செய்த தாங்கள் இந்த பீடத்தில் இன்று அமர்ந்திருக்கிறீர்கள். இதை நீங்கள் இங்கு இருக்கிற 63 உறுப்பினர்களுடைய உள்ளத்தில், நீங்கள் பெற்றிருக்கிற தமிழறிவால், நீங்கள் பெற்றிருக்கிற கருத்தால், நீங்கள் முதிர்ச்சியடைந்திருக்கிற வயதால், எல்லாவற்றிற்கும் மேலாக இப்போதிருக்கிற இடத்தினுடைய அதிகாரத்தால் நிலைநிறுத்தி, அனைவரும் அதை உணரக்கூடிய வகையில் வழி நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு மாணிக்கவேலு நாயக்கர் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, அன்றைக்கிருந்த வழக்கறிஞர் திரு கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதை இங்கே சொல்லுவது தவறில்லை என்று நினைக்கிறேன். ''மாணிக்கவேலு நாயக்கர் அவர்களே, நீங்கள் காமன்-வீல் என்ற ஒரு கட்சியை அமைத்து. அதிலே நிறைய உறுப்பினர்களைக் கொண்டு வந்து, அமைச்சரவையிலே இடம் பெற்று நடத்தியிருந்தீர்கள். இப்போது திடீரென்று அந்தக் கட்சியைக் கலைத்துவிட்டீர்கள். அப்படிக் கலைத்துவிட்டதற்குக் காரணம் என்னவென்று கேட்ட போது, காங்கிரசைப் பலப்படுத்துவதற்காக என்று சொன்னீர்கள். இப்போது நீங்கள் இந்த இடத்திலே வந்து அமர்ந்திருக்கிறீர்கள். அந்தக் காங்கிரசைப் பலப்படுத்துகிற முயற்சியைவிட எதிர்க் கட்சியைப் பலப்படுத்துகிற முறையை நீங்கள் ஏற்று இந்த நாட்டின் எதிர்க்கட்சிகளின் கருத்துக்கள் வலுவூன்றி விளங்குவதன் மூலம் ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு உழைக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். இந்த நேரத்தில் அதைத் தங்களுக்கு நான் நினைவூட்ட

வேண்டியதில்லை என்றாலும், இங்குள்ள உறுப்பினர்களுக்கு நினைவூட்டினால் நல்லது என்று கருதி உங்கள் மூலமாக அதைச் சொல்லி, எல்லாக் கட்சிகளுக்கும், எதிர்க்கட்சியிலே மூத்ததாக இருக்கக் கூடிய எங்கள் கட்சிக்கும் பாதுகாப்பு அளித்து எங்களுடைய உரிமைகளையும் பாதுகாப்பதன் மூலம், ஜனநாயகத்தைக் காப்பாற்ற நீங்கள் வழி காட்டுவீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

இன்னொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வதில் தவறில்லை என்று கருதுகிறேன். உங்களுக்கு முன்னால் இந்த இடத்தில் அமர்ந்து சிறப்பாக இந்த அவையை நடத்திச் சென்றவர் திரு. சி. பி. சிற்றரசு அவர்கள். அவர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தபோது, அவர் செய்த தமிழ் தொண்டுக்காக, அவர் செய்த பகுத்தறிவு தொண்டுக்காக சிறப்புச் செய்ய வேண்டுமென்ற முறையில் கோவையிலே 3 நாள் மாநாட்டைக் கூட்டி அதிலே முதல் நாள் மாநாட்டில் கட்சிச் சார்பற்றவர்கள் கலந்துகொண்டு படத் திறப்பு விழாவைச் செய்து, தமிழறிஞர்களைப் பாராட்டுகிற நிலையில் திரு. கிருஷ்ணசாமி பாரதி, கி. ஆ. பெ. விஸ்வநாதன், அப்பாதுரை, தேவனேய பாவாணர் அவர்களும் கலந்து கொள்ளச் செய்தபோது, நீங்களும் கலந்துகொண்டு, தமிழர்களைப் பாராட்டுகிற வகையில் அளிக்கப்படும் கேடயத்தைப் பெற வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு அவர் அளித்த பதில் கடிதம் பாராளுமன்ற நடைமுறையில் இடம் பெற வேண்டும் என்று கருதுகிறேன். ''நான் உங்கள் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தேன். இன்று உங்கள் கட்சியைச் சேர்ந்தவனல்ல. இன்று எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்ல. எந்தக் கட்சியின் மேடையிலும் வந்திருந்து சிறப்பைப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. நான் வகிக்கிற மேலவைத் தலைவர் பதவிக்கும், மேலவைக்கும் இழுக்கு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். ஆகவே உங்களுடைய அழைப்பை ஏற்க மறுக்கிறேன்'' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட உத்தமர்கள் அலங்கரித்த பீடத்தில் அதே பாரம்பரியத்தைக் காப்பாற்றத் தகுதி படைத்தத் தாங்கள் தான் தலைவராக வந்திருக்கிறீர்கள் என்பதை நினைக்கும் போது, நாங்கள் பெருமகிழ்ச்சியை அடைகிறோம் என்பதைச் சொல்லி எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, மேலவையின் எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்திருக்கிற நிலையிலும், எங்கள் கட்சியின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் சார்பிலே பாராட்டுதலையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற திரு சுவாமிநாதன் அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் இங்கே எங்களோடு இருந்தார். பிறகு இந்த



அவையின் ஓரமான பகுதிக்குச் சென்றார். அப்போதே நான் இந்த அவையின் முன்னவரிடம் கேட்டேன், ''அவர் இங்கேயிருந்து பேசிக்கொண்டிருந்தார். திடீரென்று ஒரு நாள் அந்த ஓரத்திற்குப் போய்விட்டாரே. அவருக்கு முன் பக்கத்திலேயே இடம் கொடுக்க வேண்டாமா?'' என்று. முன்னவர் அவர்களும், உடனே செயலாளரிடம் கலந்து பேசி வேறு இடம் கொடுக்க இசைந்தார்கள். இப்போது அதைத்தான் செய்திருக்கிறோம். நாங்கள் இரண்டு பேரும் அன்றே சிந்தனை செய்தோம். ஏதாவது ஓரிடத்திலே வைக்காமல் உரிய இடத்திலே வைக்க வேண்டுமென்று கருதி இங்கே வைத்திருக்கிறோம். அவர் இந்தப் பதவிக்கு வருவதற்கு முன் கட்சி சார்பற்ற முறையில் சுயேச்சை உறுப்பினராக இருந்தார். இந்தப் பதவி வந்த பிறகு இந்தப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், அதனுடைய சிறப்பை ஏற்றுக்கொள்வதற்காகவும் அவர் கட்சியை விடவில்லை. அதற்கு முன்னாலேயே விட்டு விட்டார்கள். அதற்குக் காரணம், அவையின் முன்னவர் அவர்கள் சொன்னது போல, சுதந்திரமான கருத்தைச் சொல்ல வேண்டுமென்ற வேட்கை அவருடைய மனதிலே மிக அதிகமாக இருக்கிறது. அந்த நிலையில் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்தப் பதவிக்குச் சுதந்திரமான கருத்தைத் தாங்கி நம்முடைய தலைவருக்குத் துணையாக நின்று துணைத் தலைவராகச் சிறந்து பணியாற்ற வேண்டும். நம்முடைய தலைவருக்கும், உங்களுக்கும் என்னுடைய கட்சியின் சார்பிலே வாழ்த்துதலையும், பாராட்டுதலையும் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

[முற்பகல் 10–40]

<u>திரு என். சுந்தரேசத் தேவர்:</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த அவையினுடைய தலைவராகத் தாங்கள் பொறுப்பேற்று அமர்ந்திருக்கிற காட்சியைப் பார்க்கும்போது, உண்மையிலேயே என்னுடைய உள்ளத்திலே ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்த அவையின் வரலாற்றிலே சுதந்திரம் அடைய வேண்டுமென்று போராடியவர்களில் யாரும் அந்த இடத்தில் அமையாத நிலை இருந்தது. ஆனால் இன்றைய தினம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு பெரும் வீரராக விளங்கிய தாங்கள் அந்த இடத்திலே அமர்ந்திருக்கிற காட்சி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த தேசத்தின் வீர வரலாற்றிலே தாங்கள் எடுத்துக் கொண்ட பங்கும் ஏற்றுக் கொண்ட பெரும் தியாகமும் யாராலும் மறக்க முடியாதவை. அந்தப் பேறு பெற்ற தாங்கள் இன்று முதன் முறையாக இந்த அவையின் தலைவராக அமர்ந்திருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே தனிப்பட்ட மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதை இந்த அவையின் மூலமாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, தங்களுடைய வீர வரலாறு விடுதலைப் போராட்டத்தோடு

நின்றுவிடவில்லை. இந்த நாடு விடுதலை பெற்ற பிறகு, பல விதமான காரியங்களில் தாங்கள் எடுத்துக்கொண்ட பங்கும் ஆற்றிய தொண்டும் என்றும் மறக்க முடியாதவையாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி ஏற்படுகிறது, தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றவர்களில் இன்று தலையானவர் தாங்கள் என்று கூறினால், மிகையாகாது. தேச விடுதலை பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது எல்லைப் போராட்டம் கண்டு அதில் தலைசிறந்த வீரராக விளங்கினீர்கள். தமிழகத்தில் எல்லை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், ஒவ்வொரு தமிழனும் எழுச்சி கொள்ளும் விதத்தில் இந்த நாடு பூராவும் தங்கள் செயலால் உண்மையான தொண்டால் உணர்வு கொள்ளச் செய்தீர்கள். அந்தப் போராட்டத்தால்தான் சென்னையைக் கூட நாம் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் மிகையாகாது. அந்தப் போராட்டத்தில் தலையானவராக இருந்தீர்கள் என்று எண்ணும்போது அதைத் தமிழுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் சொல்லும்போது, தங்கள் தொண்டை இன்னும் சிறப்பாக ஆற்ற வேண்டுமென்று கூறினார்கள். தங்களுடைய உள்ளத்தில் தேசம் விடுதலை பெற வேண்டுமென்ற உணர்வு எப்படி ஏற்பட்டதோ, அதற்குப் பிறகு தமிழுக்குச் சிறப்பு வேண்டுமென்ற உணர்வும் தமிழனின் கலாசாரம் காப்பாற்றப்படவேண்டுமென்று எவ்வளவு பாடுபட்டீர்களோ அவற்றிற்கு இந்த அவைத் தலைமை பொறுப்பேற்றுக் கொண்டதன் மூலமாக குறைவு வராது என்றாலும்கூட அதையும் எண்ண வேண்டியவனாக இருக்கிறேன். தாங்கள் இந்தப் பதவியில் பொறுப்பில் அமருவதால், எங்கள் கட்சிக்கு ஒரு பெரிய இழப்பாக இருக்கிறதே என்று மனதிற்குக் கஷ்டமாக இருந்தாலும் கூட, அதற்கும் மேலான சிறப்பான காரியத்தைச் செய்யக் கூடியவராக தங்களை ஆக்கிக்கொள்ளலாம் என்று எண்ணியபோதிலும், தமிழக வரலாற்றில் பெரும் தலைவர்களாக விளங்கிய தலைவர் காமராஜ், ராஜாஜி போன்றவர்கள் மறைந்துவிட்ட பிறகு, தாங்களே பெரும் தலைவராக இருப்பதால், தங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற அவா எனக்கு இருந்தது உண்டு. அமைச்சர் திரு. ஆர். எம். வீ. அவர்கள் தங்களை இந்த அவையின் தலைவராக நியமிக்க வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தபொழுது, அதைப் பாக்கியமாக கருதுகிறோம், ஏற்றுக் கொள்கிறோம், எங்கள் கட்சி அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்று சொன்னோம். ஒரு நேரத்தில் ஒரு கட்சியைப் பொறுத்து அதை பெரும் பாக்கியமாகக் கருதினாலும், அதைவிட இது சிறந்த பாக்கியமாகக் கருதுவதற்குக் காரணம் தமிழக வரலாறு, தமிழனின் கலாசாரம், பண்பாடு இவற்றையெல்லாம் இந்த நாடு முழுவதும் சென்று பிரசாரம் செய்வதற்கு இந்தப் பதவி ஒரு கருவியாக இருக்கும் என்பது தமிழுக்கும் தமிழனின் கலாசாரத்திற்கும் வரலாற்றிற்கும் தொண்டு செய்ய உதவியாக இந்தப் பதவி இருக்கிறது என்ற காரணத்தால். எங்கள் கட்சியின் நலனைவிட நான் இதைப்-



பெரிதாக நினைக்கிறேன். அமைச்சர்கள், நாட்டு நலனைக் கருதி, நாடு பூராவும் செல்கிறார்கள். கட்சிக்காரர்கள் கட்சி நலனைக் கருதிச் செல்கிறார்கள். அவற்றிற்கு அப்பால் தமிழகத்தின் பெருமையை, தமிழனின் கலாசாரத்தை நிலைநாட்ட தங்கள் பதவியைப் பரிபூரணமாகப் பயன்படுத்திக்கொண்டு, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று, தங்களால் ஆன தொண்டினைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. சுதந்திரப் போராட்ட வரலாறு படைத்தவர்களில், சிறை சென்றவர்களில் ஒருவர் முதன் முறையாக இந்த அவையின் தலைவராக இருப்பது தாங்கள்தான் என்று கருதுகிறேன். அது தவறோ சரியோ தெரியவில்லை. அப்படிப்பட்ட உயர்ந்த நிலையிலிருந்து வரும்போது, அதில் போட்டி ஏற்பட்டால், அது விரும்பத் தகாததாக இருக்குமென்று அஞ்சி, எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களைக் கேட்டேன், உங்கள் கட்சியில் எப்படி எண்ணுகிறீர்கள் என்று. தமிழுக்காகப் போராடியவர், தமிழுக்குப் பெருமை சேர்த்தவர், அவர் வருவதில் எந்த ஐயப்பாடும் இல்லை என்று அவர் தலைவரைக் கலந்து பேசிய பிறகு, மாற்றுக் கருத்துக் கூறாமல் அவர் வருவதை வரவேற்றதை உண்மையிலேயே பெருமையாகக் கருதுகிறேன். கடந்த கால வரலாற்றில் காங்கிரஸ் கட்சிக்கும் தி. மு. க. வுக்கும் பெரும் போராட்டமும் பிணக்கும் ஏற்பட்டிருந்த நேரத்தில்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தீர்கள், அவர்கள் பக்கம் செயல்பட்டீர்கள் என்றாலும், அதில் அரசியல் கண்ணோட்டத்தைக் காண முடியவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்கூட, தமிழின் வளர்ச்சிக்கும் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் அந்த உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தோளோடு தோள் நின்று தமிழுக்கும் தமிழ் கலாசாரத்திற்கும் பெருமை சேர்த்தார்கள் என்றுதான் காண முடிகிறது. அதைப் பார்க்கும்போது, தங்கள் பெருமை மேலும் உயர்ந்திருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்துக் கட்சிகளும் தங்களை வரவேற்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் மாறுபட்ட நிலையில் இருப்பதால், முன்பு தங்களுக்கு ஆதரவாக இருந்தவர் அந்தப் பக்கம் ஆதரவாக இருக்கிறாரே என்று எண்ணுவார்களோ என்று என்னுடைய சிறுமையின் காரணமாக எழுந்த எண்ணம்கூட அவர்களுடைய பெருந் தன்மையைப் பார்த்து மாறிவிட்டது. அவர் இந்த அவையின் தலைவராக வருவதற்குத் துணையாக இருக்கிறோம் என்று சொன்ன அவர்களது பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். என்னுடைய கட்சித் தலைவரும் நானும் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்க்ள் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் மாணவப் பருவத்தில் தமிழரசுக் கழகத்தில் உறுப்பினராக இருந்தவர். இப்போது

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1978 ஏப்ரல் 26

இந்த அவைக்குத் துணைத்தலைவராக இருக்கிறார். அதற்கேற்ற முறையில் தங்களுக்கு உறு துணையாக இருந்து பணியாற்றுவார்கள் என்று அவர்களைப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

Thiru A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, in your long careir, I do not think, Sir, there would ever have been an opportunity when you were felicitated on an occasion like this by a person speaking in the English language.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைக்காவது என்னை தமிழில் வாழ்த்துவீர்களென்று எதிர்பார்த்தேன்.

Thiru A. R. DAMODARAN : I hope you will bear with me, Sir, today, when I pay my tribute in the English language, because we realise that your long and devoted service to the cause of Tamil and the cause of Tamilians, not only in Tamil Nadu but in every part of the world, has endeared you to millions of our countrymen. If today we pay tribute to you on your assumption of office, it is because we sincerely feel that your love of Tamil and the Tamils will not cause you to be less liberal to the cause of other counttrymen in our country.

[முற்பகல் 10-50]

You have had ample experience in the legislative field, both as a Member of the Legislative Assembly as well as a Member of this Council in the early fifties and the later seventies. Those of us who have watched you conduct the proceedings of this House have no doubt whatsoever, Sir, that you will continue to maintain the great and noble traditions of the office that you occupy and that you will observe, as the hon. the Leader of the Opposition said, the proprieties of maintaining a degree of impartiality which is so very necessary for those who occupy the Chair in this and other Houses. We are living in times when, apart from such occasions as this, there is serious unrest in various sectors of our country, resulting in frayed tempers and political animosities and a person who occupies the distinguished position of the Chairman of such a House as this will have to exercise the utmost patience and the utmost restraint. I am sure, Sir, that with your experience and wisdom, we sitting opposite the Treasury Benches can certainly hope and expect that, in the deliberations of this



1978 ஏப்ரல் 26] [Thiru A. R. Damodaran]

very distinguished body, you will so conduct yourself as to atleast give the positive impression that persons occupying that position will conduct themselves with dignity and impartiality.

Our Council, Sir, is an old institution and the hon. the Leader of the Opposition referred to the fact that we had many traditions built up over the four or five decades of its existence. Those of us who have had the privilege to be Members of this House have witnessed many a change in the Rules of Procedure and if today, Sir, I point out the vital necessity of allowing the Legislative Council to play a more active role in the decision-making processes of Government, it is not because I want this House to steal the authority of the Lower House but only to fulfil the constitutional obligations that were envisaged when Tamil Nadu adopted a bicameral Legislature. The Upper House, or the Legislative Council, has its own functions to fulfil and I have always felt that, although in financial matters we cannot claim prerogatives over the Legislative Assembly, in non-financial matters representing as we do various important sectors of our society local bodies, Graduates, teachers, distinguished men of letters nominated by the Government—we have to make our viewpoints known to the Government so that, in this cool and calm atmosphere of the Upper House, the deliberations would achieve a dignity and a maturity that was envisaged when the Upper House was embodied in our Constitution.

I am glad, Sir, that you have assumed this office after attaining the age of 70 because, in spite of your deep dedication to Tamil culture, you have been a most controversial figure in your younger days. But, age mellows, Sir, and after the age of 70, you are like a father to all of us and if, at times, we do transgress the limits and perhaps behave in a manner that is likely to generate some heat and passion, I have no doubt that your cool and calm personality will bring an atmosphere of peace to the deliberations of this House.

I cannot promise on this occasion, Sir, that your entire six-year term is likely to be one of undisturbed placebecause that would mean that I would commit myself to a period when we would not move adjournment motions at all. It would be a false

[Thiru A. R. Damodaran] [1978 ஏப்ரல் 26

promise. But I am sure that will bring to bear on the deliberations of this House your patience and your wisdom of which we have seen so much over the past two years.

To my Friend Thiru Swaminathan, I am in a way doubly sorry that he has deserted these benches and has gone to occupy the benches, I would not say on the opposite side, but by your side. We shall miss him because he has been a devoted Member of the Opposition. When I mention the word 'opposition', I am not referring to the political opposition but to a different type of opposition—the Opposition that feels that we should bring to the notice of the Treasury Benches certain matters not wholly connected with politics and which we would like them to bear in mind during the decision making process. He has been a very distinguished member of these benches. He entered this House as an independent Member elected from the Graduates' Consituency and except for a brief spell when he was a member of a political party, he has again joined the ranks of the Independents. He has participated in all the debates and he has also been a Member of the Rules Committee. Since we wished him to play a more active part in promoting the rights of the Members we felt that he was the best person to occupy the post of Deputy Chairman. On this occasion I would like to felicitate him also and wish him all success in the new post that he has chosen to adorn. I also wish you and the Deputy Chairman a very successful and happy term of office. Thank you.

<u>திரு. கே. எஸ். அப்துல் வகாப்:</u> மாண்புமிகு தலைவர் அவர்
களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
எல்லாம் தலைவர், துணைத் தலைவர் ஆகிய இருவரையும்
பாராட்டிப் பேசினார்கள். என்னைப் பொருத்தவரையில், நான்
தங்களைப் பாராட்டிப் பேசிவிட்டேன். நான் தங்களைப் பாராட்டிப்
பேசிய சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமி
நாதன் அவர்கள் இந்த அவையின் துணைத்தலைவராகத் தேர்ந்
தெடுக்கப்படவில்லை, அவர் துணைத் தலைவராகத் தேர்ந்
தெடுக்கப்பட்ட அறிவிப்பு பிரகடனப்படுத்தப்படவில்லை. ஆகவே
நான் அவரைப் பாராட்டக்கூடிய நிலை அப்போது எனக்கு
உண்டாகவில்லை. எனவே இப்போது நான் அவரைப்பற்றி
ஒரு சில வார்த்தைகளைச் சொல்லுவது பொருத்தமாக இருக்கும்
என்று நம்புகிறேன்.



1978 ஏப்ரல் 26] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள்.
என்னுடைய அருமையான இனிய நண்பர். அவருக்கு நான் சார்ந்
திருக்கும் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை
யும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பு
மிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஒன்றைச்
சொன்னார்கள். திரு சுவாமிநாதன் அவர்கள் அவையில்
முன்வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு கடைசியில்
போய் உட்கார்ந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.
அவருக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
"புலி பதுங்குவது பயத்தினால் அல்ல; பாய்வதற்குத்தான்"
என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அந்தப் புலி
பாய்ந்து மீண்டும் முன்வரிசையில் வந்துவிட்டது. மாண்பு
மிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் தமிழில் மிகச் சிறந்த
பேச்சாளர். அருமையாகப் பேசி எல்லோருடைய உள்ளத்தை
யும் கவரக் கூடிய ஆற்றல் பெற்றவர். தமிழில் மட்டும்
அல்ல. அதேபோன்று சமநிலையில் ஆங்கிலத்திலும் திறம்படப்
பேசி எல்லோருடைய உள்ளத்தையும் கவரக்கூடியவர் என்பதை
அவர்களுடைய பேச்சைக் கேட்டவர்கள் அறிவார்கள். இனிக்
கேட்க இருப்பவர்களும் அந்தத் திறமையைப் பாராட்டுவார்கள்.

மேலவையில் முன்னவர் அவர்கள் பேசும்போது, ஒன்றைச்
சொன்னார்கள். திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது
நல்ல ஆழமான கருத்துக்களைச் சொல்வார்கள் என்றார்கள்.
உண்மையிலேயே திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் பேசும்
போது. அவருடைய பேச்சில் நல்ல ஆழமான கருத்துக்கள்
இருக்கும். 'கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிசிசம்' என்று ஆங்கிலத்தில்
சொல்லுவார்கள். அதைப் போல் ஒரு குறையைச் சொல்வார்.
குறை சொல்லி நிறுத்திவிடாமல் அந்தக் குறையை எப்படி
நிவர்த்தி செய்வது என்று வழியையும் சொல்லுவார். அப்
படிப்பட்ட 'கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிசிசம்' அவருடைய பேச்சில்
இருக்கும். பாராட்டிப்புகழ்ந்து பேச வேண்டிய இடத்தில்
பாராட்டிப் பேசுவார். ரொம்பவும் பொருத்தமான வகையில்
பேசுவார். எனவே அவரை மேலவைத் துணைத் தலைவரார்கத்
தேர்ந்தெடுத்தமைக்கு அவருக்கு வரவேற்புக் கூறி, பாராட்
டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு எதிர்க் கட்சியைச் சேர்ந்த
உறுப்பினர் இருவர் அனைவரின் கவனத்தையும் கவர்ந்திருந்
தார்கள். அதில் ஒருவர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள்.
அவர் இந்த அவையில் சுதந்திராக் கட்சியின் தலைவராக
இருந்தார். அதே சமயத்தில் என்னுடைய அருமை நண்பர்
திரு. ஹண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியின் சார்பில்
எதிர்க் கட்சித் தலைவராக சட்டப் பேரவையில் இருந்தார்கள்.
அப்போது பேரவையில் டாமினேஷன் திரு. ஹண்டே

D
1 271.32 N78
N78-1552
102956

அவர்கள். மேலவையில் டாமினேஷன் திரு. ஜி. சுவாமிநாதன்
அவர்கள். இப்படி இந்த இரண்டு சுதந்திராக் கட்சியின்
உறுப்பினர்களும் இந்த இரண்டு அவைகளையும் ஆட்டி வைக்
கிறார்களே என்று நான் நினைத்தது உண்டு. இன்றையதினம்
அந்த இருவரும் ஒரே சபையில் கூடியிருக்கிறார்கள். அப்படிப்
பட்ட திறமைசாலிகள் இங்கே இருப்பது மிகவும் வரவேற்கத்
தக்கதாகும். அதிலும் ஒருவர் இந்த அவையின் துணைத் தலை
வராக இருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். கடந்த சில
ஆண்டுகளின் சபை நடவடிக்கைகளை-புரொசீடிங்ஸ் எடுத்துப்
பார்த்தால், மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள்
பேசிய பேச்சுக்கள், அவர் தெரிவித்த கருத்துக்கள் ஆகிய
வைகளைப் பார்த்தால், இந்த சபையிலேயே 'பெஸ்ட் பார்லி
மெண்டேரியன் அல்லது பெஸ்ட் லெஜிஸ்லேட்டர்' யார்
என்று கேட்டால், அவர்தான் என்பதை யாரும் மறுக்க
முடியாது. மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள்
தான் பெஸ்ட் பார்லிமெண்டேரியன், பெஸ்ட் லெஜிஸ்
லேட்டர் என்று சொல்லுகிற அளவுக்கு அவையினுடைய
நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருந்தார்கள்.

(முற்பகல் 11.00)

என்னைப் பொறுத்த மட்டில், அவர் இங்கே இருப்பதை
விட, பார்லிமெண்டிலே, லோக் சபையிலே அல்லது ராஜ்ய
சபையிலே இருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இவ்வளவு சீக்கிரத்தி
லேயே அனுப்பிவிடலாம் என்கிறீர்களே.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இன்னும் இரண்டு வருட
காலம் இருக்கின்றது. அவர் பாராளுமன்றத்தில், லோக்
சபையில் அல்லது ராஜ்ய சபையில் இருந்தால், இந்தியா
பூராவிலும் அவருடைய பெருமை தெரியும். அவர்கள் பாராட்
டப்படுவார்கள். அவருக்கு இறைவன் நீண்ட ஆயுளையும் திட
காத்திரத்தையும் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக்
கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு ஏ. நல்லசிவம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவா
களே, வயதிலே, அறிவிலே மற்ற பண்பாடுகளிலே என்னை
விட மிகவும் வெகு தூரத்திலேயுள்ள உங்களை, நான்
எப்படி வாழ்த்துவது என்பதே எனக்கு யோசனையாக இருக்
கிறது. வயதை நினைக்கும்போது, எனக்கு யோசனையாகத்தான்
இருக்கிறது. இங்கே பேசிய நண்பர்கள் உங்களுடைய பல
பெருமைகளைப்பற்றியெல்லாம் எடுத்துக்கூறினார்கள். உங்களைப்
பற்றி நேரில் அறியாதவர்கள்கூட நன்கு அறிந்துகொள்ளக்
கூடிய அளவுக்கு வேறொரு பெருமை பற்றி நான் இங்கே





எடுத்துக்கூற விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே தமிழ் ஆட்சிக்
குரிய இடத்தை, கவுரமான இடத்தை அடையவேண்டும் என்று
விரும்புகின்ற கட்சியிலேயிலிருந்து நானும் வந்தவன் என்பதைக்
கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே உயர்நீதி
மன்ற மொழியாக, கல்லூரி மொழியாக மட்டுமல்ல, தேசிய
அளவிலேயே மற்ற மொழிகளுடன் சம அந்தஸ்தைப் பெறும்
மொழியாக தமிழ் மொழி இருக்க வெண்டும் என்ற கொள்
கையை உடையவர்கள் நாங்கள். அகில இந்திய பாராளு
மன்றத்தில், தேசிய மொழியாக தமிழை அங்கீகரிக்க போராட்
டத்தை நீங்கள் நடத்தினாலும், அதற்கு எங்கள் ஆதரவு
இருக்கும் என்பதை நாண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள்பற்றி எனக்கு
அதிகம் தெரியாது. ஆனால் இங்கே பேசிய நண்பர்கள் கூறிய
வைகளிலிருந்து, இந்தப் பதவிக்குப் பொருத்தமானவர் அவர்.
அதனால்தான் அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்
டிருக்கிறார்கள் என்பதை நான் உணர்கிறேன், எனது கட்சியின்
சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் தலைவர்
அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் ஒரு வேண்டு
கோளை வைக்கிறேன். என்னைப் போன்று ஒரு உறுப்பினரைக்
கொண்ட கட்சிகள் இந்த அவையில் சில இருக்கின்றன. பல
சுயேச்சை நண்பர்களும் இருக்கின்றனர். அப்படிப்பட்ட
நிலைமையில் உள்ளவர்கள் இங்கு பலவீனமானவர்கள்.
தமிழ் நாட்டில் உள்ள மக்களுடைய குறைகளையும், நாங்கள்
பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுடைய பிரச்சினைகளையும் இங்கே
எடுத்துச் சொல்வதற்கு, ஆளுங்கட்சிக்கும் பிரதான எதிர்கட்
சிக்கும் கொடுப்பதை விட அதிக நேரத்தை அந்தக் கட்சிப் பிரதி
நிதிகளுக்கும் கொடுத்து, பலவீனமான பகுதியினராக இருக்கும்
எங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
நம்முடைய மேலவையைப்பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள்.
மேலவை எப்படித் தேவைப்படுகிறது என்பதைப்பற்றி நமது
மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்
களும் பேசினார்கள். அவர் கருத்துக்களை நானும் ஒப்புக்கொள்
கிறேன். இந்த மேலவைக்கு அதற்குரிய கௌரவத்தைக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இந்த
மேலவையை ஒரு அலங்கார பொம்மையாக வைத்திருக்காமல், அதை
ஒரு வருடத்தில் 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்டி, தமிழ்
நாட்டிலுள்ள பிரச்சினைகள் என்ன, மக்களுடைய குறைகள்
என்னென்ன என்று பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அங்கத்தினர்கள்
எடுத்துச்சொல்ல அரசுக்கு வேண்டிய ஆழமான கருத்துக்களை
வேண்டும். அதனால் கிடைக்கக்கூடிய பலன் மக்களுக்குக் கிடைக்க
தலைவர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். சமுதாயத்தில் உள்ள பல பிரச்சினைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு, அவைகளைப் பற்றி ஆலோசிப்பதற்கு பலவிதத்திலும் வாய்ப்புள்ள இடம் எது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பட்டதாரி ஆசிரியர் தொகுதியிலிருந்து வந்தவர்கள், ஸ்தல ஸ்தாபன பிரதிநிதிகள், இப்படி பலதரப்பட்ட அங்கத்தினர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பல கோணங்களில் பிரச்சினைகளை ஆராய்ந்து தெளிவுபடுத்த வேண்டும். அரசுக்கும் அந்த முறையிலே உதவ அவர்கள் பயன்படுவார்கள். அவர்கள் பல துறைகளில் அனுபவம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். நாம் அவர்களின் அனுபவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பேரவையில் வந்துள்ளவர்கள் எல்லாம் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால் மட்டும் இந்த அவையினுடைய அந்தஸ்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர் சொல்லிய கருத்தை நானும் ஒப்புக்கொள்கிறேன் பல துறைகளிலே அனுபவம் பெற்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ள 3 மாதத்திற்கு ஒரு முறையாவது இந்த அவை கூட வேண்டும் என்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், மக்களின் பிரச்சினைகளை நாம் தீவிரமாகக் கவனிப்பதற்கு உதவியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. மாணிக்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தங்களைப் பாராட்டுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே வயதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். வயது குறைந்தவர்கள் பெரியவர்களை வாழ்த்துவதற்கு உரிமை இல்லையோ. இருக்கிறதோ என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். நம் தமிழர் பண்பாட்டிலே பெரியவர்கள் மட்டுமல்ல, குழந்தைகள்கூட வாழ்த்துக் கூறலாம் என்ற நிலை இருக்கிறது. அது சிறப்பான தமிழ்ப்பண்பாடு. அதற்கேற்ப வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும், வாழ்த்தப்படவேண்டிய தலைவர் தாங்கள் என்ற முறையில் தங்களை வாழ்த்துவதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நமது முன்னவர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த நெசவாளர் ஒருவர் மேலவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அச்சுத் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய தாங்கள் இன்று மேலவையின் தலைவராக வந்திருப்பது, தமிழகத்தில் உழைப்பாளர் வர்க்கம் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும் என்பதற்கு ஒரு சான்றாகத்தான் தாங்கள் தலைவராக



அமர்ந்துள்ளீர்கள். அதற்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அச்சுத் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி தமிழ் இலக்கியத்தினைப் பயின்று, நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டு நீண்ட காலமாக அரசியல் அனுபவங்களைப் பெற்றிருக்கக்கூடிய தாங்கள் தியாகத்தழும்புகளை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய தாங்கள், இந்த அவையின் தலைவராக வந்திருப்பது தமிழ்நாட்டின் மிகப் பெரிய பாரம்பரியத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு பாராட்டும் மதிப்பும் என்று நான் கருதுகிறேன். தாங்கள் விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றவர்கள். இலக்கியத் துறையிலே பண்பட்டவர்கள். அப்படிப்பட்ட தாங்கள் மேலவையின் தலைவராக வந்திருப்பது தமிழ் மக்களுக்கு, தமிழுக்குப் பெருமையைச் சேர்க்கும் நிகழ்ச்சியாகும். நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் இந்த அவையிலே கொஞ்ச காலமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறேன். தாங்கள் இந்த அவையின் கண்ணியத்தையும் உறுப்பினர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்குப் பெரிதும் பாடுபட்டிருக்கிறீர்கள் அப்படிப் பாதுகாப்பீர்கள் என்ற என் நம்பிக்கையையும் தெரிவித்துக் கொண்டு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.10)

இந்த நேரத்தில் மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். தாங்கள் எப்படி கடந்த காலத்தில் தமிழ்நாட்டில் சிலப்பதிகாரத்தை, வ. உ. சிதம்பரத்தை, இராமலிங்க அடிகளாரை, தமிழ் மக்கள் நன்கு புரிந்துகொள்ள சேவை செய்தீர்களோ, அதைப் போல இந்த அவையில் சிறிய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் பெரிய கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்கள், அவர்களுடைய உணர்வுகள், அதனுடைய உண்மை ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பதற்கு மேலவைத்தலைவர் என்ற முறையில் தாங்கள் முழுமனதுடன் முயற்சிப்பீர்கள் என்று கருதி மீண்டும் வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக் கூடிய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கும் வாழ்த்தையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவரோடு நான் சில மாதங்கள்தான் பழகியிருந்தாலும், இந்த அவையில் வரக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைக் கவனத்தோடு ஆராய்ந்து, உணர்ந்து அதற்கு வேண்டிய ஆதாரத்தோடு தயாராக வந்து அந்தப் பிரச்சினைகளை இந்த அவையிலே எழுப்பி, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஒரு சிறப்பான சேவையைச் செய்துகொண்டிருந்தார். அவருடைய இடம் மாற்றப்பட்டதாலும், அவருக்கு இருக்கக்கூடிய பொறுப்பின் காரணமாகவும் அந்த சேவை இந்தத் தரப்பில் இருப்பவர்களுக்குக் குறைந்து விட்டதாகவே கருதுகிறேன். எனவே ஒரு வகையில் நஷ்டம் ஆனால் சில நேரங்களில் சில நஷ்டம் பொதுவிலே இலாபகர

மாக மாறலாம் என்ற முறையில், வரக்கூடிய காலங்களில் காரியங்கள் நல்ல முறையில் நடைபெறும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பல இடங்களிலே சமூக நிர்பந்தத்தின் காரணமாகப் பல கிளர்ச்சிகள் இருக்கின்றன. அதன் காரணமாக இந்த அவையிலே உணர்ச்சிவசப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம். கடந்த காலத்திலே அப்படி ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படும்போது, உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற முறையிலே தலைவருக்கு திரு சுவாமிநாதன் அவர்கள் வேண்டுகோள்களை விட்டிருக்கிறார்கள். இந்தத் தரப்பிலே இருக்கும்போது நியாயத்தை உணர்ந்ததைப் போலவே, துணைத் தலைவராக வந்திருக்கும் தாங்கள் அந்தமாதிரி நேரத்திலே அந்த உணர்வுகளை உணர்ந்து உறுப்பினர்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பீர்கள் என்று நம்பி வாழ்த்தி அமர்கிறேன்.

*Thiru D. V. D'MONTE : Hon. Chairman, as the lone voice of Janata Party here-- and perhaps I can count myself among the weaker sections also as already stated by my hon. Friend-- it is my pleasure and privilege to associate myself with the sentiments and good wishes and felicitations expressed by the Leader of the House, the Leader of the Opposition and all my distinguished Friends. I have no doubt Sir that you would continue to bring to your great office, credit and distinction and to bear in the discharge of your duties fairness and justice as you have been doing as Deputy Chairman. Of course, we, the Members on this side have had the opportunity of observing you as a Presiding Officer--as Hon. Deputy Chairman and we know that you have been extremely fair and just and we have had the benefit of your sagacity and scholarship in the discharge of your duties.

As for my hon. Friend Thiru Swaminathan, I am almost at a loss of words, because we shall certainly miss him, a most distinguished legislator and one who has full knowledge of all the various functions of the Ministry, the rules of the House and more than anything else one who has never given offence to anyone. Whatever he had to say, he stated it in the mildest possible terms and in the most constructive manner. We as colleagues had the benefit of his learning and ability. While some of our Members are really dedicated, we shall lose a very able colleague in Thiru Swaminathan. I have no doubt that he will fill the high office of Deputy Chairman with his ability and charm. I am sure that in Thiru Swaminathan we will have a person who





will discharge his duties not only with fullest justice but with great scholarship. Perhaps it may not be out of place to state that it should be the policy of the Government to pitch upon capable and distinguished legislator of the Opposition to ensure that this State of Tamil Nadu has the benefit of such ability in the highest public services and in Parliament.

We have the good fortune of having very distinguished, capable, outstanding, competent and sincere people. I would request the Ruling Party to cut across Party lines to ensure that distinguished Members of the Opposition will also be given the opportunity of being given a place in Parliament. That is the only point that I would like to make on this occasion.

I wish you, Sir, and Thiru G. Swaminathan, the Hon. the Deputy Chairman all the very best in the future.

Thank you.

திரு. டி, சந்தோஷம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே பல உறுப்பினர்கள் மிகச் சிறப்பாகப் பாராட்டிப் பேசிய பிறகு, அவர்கள் சொன்னதற்கு மேலாக புதிதாக நான் ஒன்றும் கூற முடியாது என்பதை உணர்ந்திருக்கிறேன். சொன்னதையே திருப்பிச் சொல்வது நல்லதல்ல என்பதையும் உணர்ந்திருக்கிறேன். இருந்தாலும், தங்களையும், தங்கள் உதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற துணைத்தலைவர் மாண்புமிகு திரு சுவாமிநாதன் அவர்களையும் நானும் பாராட்டி வாழ்த்த வேண்டுமென்ற ஆசையின் அடிப்படையிலே ஒரு சில விநாடிகள் மாத்திரம் பேச விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்த வரையில், உள்ளத்தில் உள்ள உண்மையைக் கூற வேண்டுமானால், தாங்கள் இந்தப் பதவியை ஏற்றிருப்பது எனக்கு மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் தருகிறது. காரணம், ஆங்கிலத்திலே சொல்லுவார்கள், ''The Speaker of the House of Commons never speaks' என்று. நான் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, நீங்களும் இங்கே நியமனம் பெற்றிருந்தீர்கள். நீங்கள் அடிக்கடி உங்களுக்கே உரித்தான இனிய, தேன் தமிழிலே நீண்ட உரையாற்றுவீர்கள். அதைக் கேட்டு மகிழலாம், உங்கள் வாயிலாக தமிழின் சுவையை நானும் அனுபவிக்கலாம் என்ற ஆவலோடு இருந்தேன். அந்த ஆசை நிறைவேறாத வகையிலே நீங்களும் அங்கே போய் மௌனமாக உட்கார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால், எனக்குப் பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கிவிட்டீர்கள். இருந்தாலும்

தங்களுடைய கடந்த காலத் தொண்டைக் கவனிக்கும்போது, குறிப்பாக நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே தாங்கள் செய்த தியாகத் தொண்டையும், தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தாங்கள் செய்த தொண்டுகளையெல்லாம் பார்க்கிறபோது, இந்தப் பதவி தங்களைப் பொறுத்த வரையில், ஒரு சிறிய பதவி சிலரைப் பொறுத்த வரையில் சொல்லலாம், ஒரு பதவியை ஏற்பதன் மூலமாக அவர்கள் பெருமையை அடைகிறார்கள் என்று மற்றச் சிலரைப் பொறுத்த வரையில் கூற வேண்டுமானால், அந்தப்பதவியை ஏற்பதன் மூலமாக அந்தப் பதவிக்குப் பெருமையை உண்டாக்குகிறார்கள் என்று. உங்களைப பொறுத்த வரையில், இரண்டாவது வகையைச் சேர்ந்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். தாங்கள் இந்தப் பதவியை ஏற்பதன் மூலமாக இந்தப் பதவிக்குப் பெருமையை அளித்திருக்கிறீர்கள். இந்த அவைக்கே நீங்கள் பெருமையைத் தேடித் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் இறைவன் அருளால், சுகத்தோடும், பலத்தோடும், நீண்ட காலம் வாழ்ந்து இதைவிட பெரிய பதவிகளைப் பெற்று தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன். தங்கள் சேவை சிறக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

எனது நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களைப் பொறுத்த வரையிலே, எனக்கு முன்னே பேசியவர்கள் எல்லாம் ஏகோபித்துச் சொன்ன கருத்தைத் திரும்பவும் சொன்னாலும் தவறில்லை என்று கருதுகிறேன் அவர் ஒரு மிகச் சிறந்த பாராளுமன்றவாதி. அவர் தன்னுடைய பொறுப்பை மிகவும் உணர்ந்து கடமையுணர்ச்சியுடன் இந்த அவையிலே செயல்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11.20)

அவர் எல்லா விவாதங்களிலும் கலந்துகொண்டு உரையாற்றுவார். ஆனால் உரையாற்ற வேண்டுமே என்பதற்காக மேலெழுந்தவாரியாக எந்த சமயத்திலும் அவர் பேசியது கிடையாது. தகுந்த தயாரிப்புடன்—பிரிபரேஷன் செய்துகொண்டு—ஆணித்தரமான புள்ளி விவரங்களை சேகரித்து வைத்துக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் எவ்வளவு சிக்கலான பிரச்சனையாக இருந்தாலும், தெளிவாகக் கருத்துக்களைக் கூறி, இந்த அவைக்குப் பெரிதும் உதவியாகப் பணியாற்றி வந்திருக்கிறார். அவர் செய்த சேவையின் காரணமாக, அந்த நல்ல பணிகளின் காரணமாக, இன்று அவருக்கு இந்தப் பதவி கிடைத்திருக்கிறது என்று நினைக்கிறேன். அவரைப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். அவருடைய சேவை சிறக்கட்டும். ஒரே ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். நேர்மையிலும் நாணயத்திலும் தவறக்கூடாது என்ற எண்ணம் கொண்டவன் நான். அப்படியே நேற்று நடந்த பேச்சு வார்த்தையிலே நான் அப்படி நேர்மை தவறாத



முறையில் நடந்துகொள்ள விரும்பினேன். அப்படித்தான் நடந்தேன் என்று நினைக்கிறேன். இருந்தபோதிலும் அந்தப் பேச்சு வார்த்தை சமயத்தில், ஏதாவது நண்பர்கள் ஒரு சிலர் மன வேதனை கொண்டிருந்தால், என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களை வாழ்த்துகிறேன். உங்களுடைய தலைமை உயர்ந்த பாரம்பரியத்தைக் கொண்டது. கூடுமானால் இந்த மேலவையின் பாரம்பரியத்தை இன்னும் உயர்த்த வேண்டும். அதற்கான அருளை உங்களுக்கு வழங்க வேண்டுமென்று வேண்டி அமைகிறேன். வணக்கம்.

<u>திரு. செ. முத்துசாமி :</u> மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று ஒரு தமிழாய்ந்த பெருமகனை இந்த அவையின் மதிப்பு மிக்க தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்த ஆசிரியப் பெருமக்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டுக்கு ஒரு பெருமையாக தமிழ் அறிந்தவர் தலைமை ஏற்பதற்கான வாய்ப்பினைத் தரவேண்டி, ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் உதாரணமாக நின்று எல்லோரையும் அழைத்து பெருந்தன்மையோடு அணுகி, தங்களுடைய கட்சிக்கு அந்தப் பொறுப்பு வேண்டாம் என்றும் இவரையே தலைவராகக் கொண்டுவர வேண்டுமென்றும் முன் வந்தமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கும் அவருடைய கட்சிக்கும் என்னுடைய நன்றியை அடுத்தபடியாக உரித்தாக்குகிறேன். அந்த முன் உதாரணத்திற்குச் சற்றும் குறையாமல் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நல்ல பாரம்பரியத்தை உருவாக்கியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பெரியவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, துணைத் தலைவர் பொறுப்பை நீங்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து ஒரே முகமாகத் தேர்ந்தெடுங்கள் என்று கேட்டுக்கொண்டதும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்கள் கட்சிக்குப் பெரும்பான்மை இருந்தாலும், ஆளும் கட்சி எந்த அளவுக்கு சுயேச்சையாக இருக்கிற தமிழ்ப் பெருமகனுருக்கு அந்தப் பொறுப்பை விரும்பி பெருந்தன்மையோடு அளித்ததோ அதே பெருந்தன்மையோடு ஏகமனதாக சுயேச்சையாகச் செயல்படும் துணைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுக்க முன் வந்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவை மிக நல்ல பாரம்பரியத்தோடு விளங்க வேண்டுமென்று இங்கே வாழ்த்திய எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். வாழ்த்த வேண்டுமென்று சொல்லும்போது, தலைவரை சாதாரணத் தொண்டர்கள் கூட வாழ்க என்று வாழ்த்துகிறோம். அதைப்போல தமிழ்ப் பெருமகனாரை இந்த அவையின் தலைவரை

[திரு. செ. முத்துசாமி] [1978 ஏப்ரல் 26

சாதாரண ஒரு ஆசிரியன் என்ற முறையில், அவர்களுடைய
பிரதிநிதி என்ற முறையில், நீங்கள் வாழ்க பல்லாண்டு என்று
கூறி ஆசிரியப் பெருமக்கள் பிரச்சினை மட்டுமல்ல, தமிழுக்கு
நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் இந்தத் தலைமைப் பொறுப்
பிலுள்ள காலத்திலே நிறைய உண்டு. அதை நிறைவேற்ற
வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். தலைவரான
காரணத்தால், இந்த அவையில் தங்கள் பேச்சு குறைந்துவிடுமே
தவிர, தமிழகம் முழுவதும் இந்த அவையின் தலைவராக
தமிழ்ப் பெருமகனாகிய நீங்கள் சென்று சேவை செய்வதற்குத்
தடைவிதிக்கப்படவில்லை. அந்தப் பெருமையை இந்த அவை
தங்களுக்குத் தந்திருக்கிறது. இந்த ஆறு ஆண்டு காலத்தில்
தமிழுக்கு உயர்ந்த சேவையை அமைதியாகச் செய்வதற்கு,
சிக்கலின்றிச் செய்வதற்கு நல்ல பொறுப்பைத் தந்திருக்கிறது
இந்த அவை என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
நாங்கள் பிரச்சினையைச் சொல்லும்போது, கடந்த காலத்தில்
நான் இருந்த ஆறு ஆண்டுக் காலத்தில் தமிழுக்காகக் குரல்
கொடுத்தபோது, அதற்குத் துணையாக நின்ற தங்களை எண்ணிப்
பார்க்கிறேன். நாங்கள் இந்தப் பிரச்சினைக்கு வாதிடும்போது
நீங்கள் இளமைப் பிராயத்தில் அந்தப் பிரச்சினையை எவ்வளவு
தீவிரமாக....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்போது கிழவனா நான் ?

திரு. செ. முத்துசாமி : நீங்கள் அனுமதிப்பீர்கள் என்ற
நம்பிக்கையோடு சொல்கிறேன். உங்கள் சேவையால் யுனிவர்
சிடி சிண்டிகேட் மெம்பராக இடம் பெற்று இன்று இந்த
நிலைமைக்கு உயர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் பல்லாண்டு சேவை
புரியவேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, மதிப்பிற்குரிய துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன்
அவர்களை வாழ்த்த வேண்டிய பொறுப்பு எனக்கு வந்திருக்
கிறது. மிகச் சிறந்த அறிவாற்றல் உள்ளவர். அதே சமயம்
நுணுக்கம் புரிந்தவர். அவை அடக்கத்தோடு எவ்வளவு
தான் அவரை எதிர்த்துக் கருத்துக்களைச் சொன்னாலும், எரிச்சல்
அடையாமல், பாராளுமன்ற ஜனநாயகம் இந்த அவையில் நிலவ
உதவியிருக்கிறார்கள் என்பதைக் கடந்த காலத்தில் கண்டிருக்
கிறேன். அதே முறையில் துணைத் தலைவராக இருந்தாலும்,
பிரச்சினைகளை எடுத்து வைக்கும் உங்கள் உரிமை பறிக்கப்பட
வில்லை என்று கருதுகிறேன். அந்த உரிமையை அவையில்
நிலைநாட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏகமனதாகத் தேர்ந்
தெடுக்கப்பட்டிருக்கிற நீங்கள் எங்கள் எல்லோருக்கும் நன்மை
கள் உருவாவதற்கு துணை நிற்பீர்கள் என்று நம்புகிறேன்.
ஆங்கிலத்தில் திறமை பெற்றவர்கள் அவர்கள். தமிழ்ப்
பெரியார் தலைவராக இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள். இந்த



1978 ஏப்ரல் 26] [திரு. செ. முத்துசாமி]

மேலவையில் தமிழால் என்ன செய்ய முடியும், என்ன முடியாது என்று பிரித்து, தமிழால் முடியாது என்பதை விலக்கி, தமிழால் முடியும் என்பவற்றை தயவு செய்து இந்த அவையில் தங்கள் ஆற்றலைப் பயன்படுத்தி, செயலாக்க வேண்டுமென்று தலைவர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைச்சர்களையும் வேண்டிக்கொண்டு, இந்த வாய்ப்புக்காக நன்றி தெரிவித்து பெரியவர் பல்லாண்டு வாழ்க, துணைத் தலைவர் பல்லாண்டு வாழ்க என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. சி. ரா. லட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மேலவையில் புதியவன் என்ற முறையில் என்னுடைய கன்னிப் பேச்சாக மாண்புமிகு தலைவர் அவர்களையும் துணைத் தலைவர் அவர்களையும் பாராட்டிப் பேசும் வகையில் ஒரு வாய்ப்பு கிடைத்தமை குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய ஆசிரியர் சமுதாயம் இன்று பெரிதும் மகிழ்ச்சியடையும் என்று நம்புகிறேன். வயதில் இளையவன் என்று இருந்தாலும் கூட, தங்களுடைய பேச்சுக்களையும் தங்களுடைய தொண்டுகளையும் மிக நன்கு அறிந்தவன். சிறு வயதிலிருந்தே மிக உன்னிப்பாக தங்களுடைய கூட்டங்களுக்கு வந்து தங்களுடைய இனிமையான பேச்சுகளைக் கேட்டவன் என்ற முறையிலும் ஒரு காலத்தில் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கியிருந்து, யாருடைய பேச்சைக் கேட்டேனே, அவர் இந்த அவையின் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில், இராமசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளி நடுமன்றத்தில் தாங்கள் பேசிய பேச்சுக்களும் சொற்பொழிவுகளும் இன்றும் என்னுடைய மனதில் பசுமையாக இடம் பெற்றிருக்கின்றன. தமிழகத்திலே முதலாவதாக தமிழ் பயிற்சி மொழியாக பட்டப் படிப்பு வகுப்புகளில் செயல்படுத்தப்பட்டு, அப்படி செயல்படுத்திய முதல் கல்லூரியில் படித்த மாணவன் நான் என்ற முறையில், அப்படிப்பட்ட கல்லூரிகளில் மாணவர்கள் சென்று படிக்கத் தயங்கிய நேரத்தில் மிகவும் ஆர்வத்துடன் உற்சாகத்துடன் சென்று தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுப் பட்டம் பெற்றவன் என்ற முறையில், தமிழ் ஆர்வம் கருதி தமிழின் உயர்விற்காக உழைத்த ஒருவருக்கு இந்த நல்ல வாய்ப்பு வந்திருப்பதைக் கருதி மகிழ்ச்சியடைகிறேன்.

(முற்பகல் 11-30)

தங்களுடைய நாட்டுப்பற்று, தங்களுடைய மொழிப்பற்று, தங்களுடைய இலக்கியத்தொண்டு, தாங்கள் விடுதலை இயக்கத்திற்கு ஆற்றிய தொண்டு, தங்களுடைய உழைப்பு எல்லாவற்றிற்கும் மேலாக ஒருபுறத்தில் தாங்கள் தேசியவாதியாக

இருந்தாலும், மறுபுறத்தில் இந்த மாநிலத்தின் உரிமைகளை
விட்டுக் கொடுக்காமல், அவைகளுக்காக கடந்த காலத்திலும்
சரி, நிகழ்காலத்திலும் சரி, போராடி, இந்த மாநிலத்தின்
உரிமைகளைக் காத்து தங்களுக்கு என்று ஒரு தனி இடம் பெற்று,
அந்த வகையில் தாங்கள் செய்த தொண்டுகளுக்கெல்லாம் ஒரு
நல்ல பரிசாக, பெருமையாக இன்றைய தினம் உன்னதமான இடத்
தில் தாங்கள் வீற்றிருப்பது குறித்தும், அதற்கான வாய்ப்பை தமிழக
அரசும், இதர கட்சித் தலைவர்களும் சேர்ந்து கொடுத்திருப்பது
குறித்தும் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதே போல நான் சார்ந்
திருக்கும் ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலும் என்னுடைய
பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு மகிழ்ச்சி
யான செய்தியினையும் இங்கே தாங்கள் பதவி ஏற்றிருக்கிற
இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
இந்த மன்றத்தில் 6 ஆசிரியர் தொகுதிகளிலிருந்து தேர்ந்
தெடுக்கப்பட்டு வந்திருக்கிற பிரதிநிதிகள் முற்றிலும் ஆசிரியர்
களாக இருக்கிறார்கள் என்கிற செய்தி எங்களுக்கு இரட்டிப்பு
மகிழ்ச்சியளிக்கிறது. கடந்த காலத்தில் ஒன்றிரண்டு குறைகள்
இருந்தாலும், இப்போது முற்றிலும் 6 தொகுதிகளிலும் ஆசிரியர்
களாக வந்து இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கிற காட்சியைக்
காண்கின்றபோது, மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே
அந்த ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் மிகப் பெரிய பொறுப்பை
ஏற்றுக்கொண்டிருக்கிற தங்களுக்கு எங்களுடைய பாராட்டுதல்
களையும் இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இப்போது இந்த அவையின் துணைத் தலைவராகத் தேர்ந்
தெடுக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்
அவர்கள் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட
உறுப்பினராவார். பட்டதாரிகள் தொகுதியில் ஆசிரியர்கள்
கணிசமான வாக்காளர்களாவார்கள். அந்த வகையில் கணிசமான
ஆசிரிய வாக்காளப் பெருமக்களின் வாக்குகளைப் பெற்று தேர்ந்
தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் இந்த மன்றத்தின் துணைத்
தலைவர் பொறுப்பை ஏற்றது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி
யடைகிறேன். கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் மட்டும் பணியாற்றும்
2½ லட்சம் ஆசிரியர் பெருமக்களின் சார்பாக அவருக்கு வாழ்த்துக்
களையும் பாராட்டுதல்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
மேலவைத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் தாங்கள் பொறுப்
பேற்றிருக்கிற இந்தக் காலம் சட்ட மன்ற வரலாற்றில் சிறப்பான
காலமாக, பெருமை மிக்க காலமாக, மற்றவர்களுக்கு எடுத்துக்
காட்டாக அமைகிற காலமாக அமைய வேண்டும் என்று விரும்பி
வேண்டிக் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர்
அவர்களே, இந்த அவையில், ஆரம்ப ஆசிரியர்களுடைய தொகுதி
யிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து, நான் பேசுகிற முதல்



பேச்சே, ஆரம்பக் கல்வியில் 3-வது வகுப்புவரை மட்டுமே
படித்து, அதற்கு மேலும் படிக்க வாய்ப்பில்லாததால் அதற்குப்
பின்னால் படிப்பைத் தொடராமல், தன்னுடைய உழைப்பாலும்,
ஆய்ந்து அறிகிற திறத்தாலும் உயர்ந்து இன்றைக்கு மேலவை
யின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற தங்களை வாழ்த்
தும் வகையில், அமைந்திருப்பது, 'ஆரம்ப ஆசிரியர்களால்
என்ன முடியும்", இவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள்தானே' என்று
கருதுகிறவர்களுக்கு, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தந்த அறிவு
தான் அதுவும் 3-வது வகுப்புவரை தந்த அந்தஅறிவு தான், அந்த
ஆற்றல்தான் இன்றைக்கு மேலவையின் தலைமைப் பொறுப்
பையும் தாங்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை
எண்ணிப் பார்த்து தங்களைப் பாராட்டலாமா, பாராட்டக்கூடிய
வயது எனக்கு இருக்கிறதா இல்லையா என்ற விமரிசனத்திற்
குள்ளே போகாமல் ஆரம்ப ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில்,
அதன் பிரதிநிதி என்ற முறையில் தங்களைப் பாராட்டுவதிலே
மெத்த பெருமை அடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பேசும்
போது தாங்கள் அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு
விட்டதால், இனி உங்களுடைய தேன் தமிழ் பேச்சை எப்போது
கேட்பது என்று சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டார்கள்.
ஆனால் நீங்கள் தேன் குடமாக கொட்டித் தராவிட்டாலும்
கூட, அவ்வப்போது தேன்துளிகளாக வழங்குவீர்கள் என்பதற்கு
எடுத்துக்காட்டாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.
ஆர். தாமோதரன் அவர்கள் ஆங்கிலத்தில் தங்களைப் பாராட்டிப்
பேசும்போது "இன்றைக்காவது என்னைத் தமிழில் பாராட்டு
வீர்கள் என்று எதிர்பார்த்தேன்" என்று சொல்லியது இந்த
அவையிலே தேன் துளியாக அமைந்தது. தங்களுடைய
ஆற்றலை தாங்கள் எங்கே இருந்தாலும் நாங்கள் உணரும் வாய்ப்
பைத் தந்திருக்கிறீர்கள் என்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி
யடைகிறேன்.

ஆசிரியர் பிரச்சினையை நீங்கள் மிகவும் தெளிவாக அறிந்
தவர்கள். எங்களுடைய ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில்
தாங்கள் கலந்துகொண்டு இந்த நாட்டில் ஆரம்ப ஆசிரி
யருக்குச் சம்பளம் ரூ. 150, இந்த நாட்டிலே இருக்கிற
ஏவலருக்கு சம்பளம் ரூ. 130, ஏவலருக்கும் ஆரம்பப் பள்ளி
ஆசிரியருக்கும் இடையில் உள்ள ஊதிய வித்தியாசம் ரூ. 20
தான் என்றும், இதுதான் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்
காக அரசியல் தலைவர்கள் போராடும் லட்சணமா என்றும்
கேட்டது என் நினைவுக்கு வருகிறது. அந்த ஆசிரியர்களின்
கோரிக்கையை இங்கே அமைச்சர்களுடைய கவனத்திற்குக்கொண்டு
வருவதற்கு இந்த நிகழ்ச்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது
குறித்து நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த வ
யில் எங்களை நன்கு உணர்ந்தவராகிய தாங்கள் இன்றை
தலைவராக வந்திருக்கிறீர்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்

பினர் திரு. நல்லசிவம் அவர்கள் "எங்கள் பிரிவு பலகீனமான பிரிவு" என்று சொல்லிக்கொண்டார்கள். எங்களுடைய பிரிவும் பலகீனமான பிரிவுதான். எனவே, எங்களுக்குத் தகுந்த சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்; அளிப்பீர்கள் என்பதை இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 3 ஆசிரியர்களுக்குமே இங்கே தங்களை வாழ்த்துகிற பெருமையை, வாய்ப்பை அளித்திருக்கிறீர்கள் என்பதிலிருந்து நாங்கள் நன்கு உணர்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: என்னை வாழ்த்துகிறீர்கள் என்பதால் வாய்ப்பு கொடுத்துள்ளேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: எப்படியும் நாங்கள் அனைவரும் உங்களை வாழ்த்துகிறோம். மற்றொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் பலகீனப் பிரிவினர் என்று சொல்லப்பட்டிருப்பதால், இதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு அப்துல் வகாப் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் மேலவையில் ஆதிக்கம் செலுத்திய திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இன்றையதினம் இந்த மேலவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றும், சட்டப் பேரவையில் ஆதிக்கம் செலுத்திய டாக்டர் ஹண்டே அவர்கள் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றும் ஆக அவர்கள் இருவரும் இந்த அவைக்கு வந்திருக்கிறார்கள் என்றும், சொன்னார்கள். இவ்வாறு ஆதிக்கம் செலுத்திய இருவரும் இந்த அவையில் இருக்கும்போது, அதிலும் ஒருவர் மேலவையின் துணைத் தலைவராக இருக்கிறபோது, அதே வகையான ஆதிக்கத்தை யாரும் செலுத்தாத வகையில் எல்லோருக்கும் சமவாய்ப்பு. எல்லோரும் சமம் என்று சொல்கிற அளவுக்கு இனி எல்லாம் இருக்கும் என்றும், யாரையும் பலகீனப் படுத்தும் வகையில் நீங்கள் இடம் அளிக்க மாட்டீர்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இதை நான் சொல்வதற்குக் காரணம் நாங்கள் பலகீனப் பிரிவினர் என்று சொல்லப்பட்டதால்.

அடுத்து, உங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றால், அதற்குக் காரணம் உங்களை நாங்கள் ஆசிரியராகக் கருதுகிறோம். தந்தையாகக் கருதுகிறோம், என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். நாங்கள் உங்களை ஆசிரியராகக் கருதுகிறோம். காரணம்.

"குலனருள் தெய்வம், கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே"



என்று பவணந்தி முனிவர் சொல்லியிருக்கிறார் என்பதைத் தாங்களே நன்கு அறிவீர்கள். அதற்கு எழுத்துக்கு எழுத்து இலக்கணமாகத் திகழ்கிறீர்கள் தாங்கள், சொல்லுக்குச் சொல் அதற்கு இலக்கணமாகத் திகழ்கிறீர்கள் தாங்கள் என்பதால், தங்களை நாங்கள் ஆசிரியராகக் கருதுகிறோம். தங்களிடம் அந்த வகையில் நாங்கள் மாணவர்களாக இருக்கிறோம். மாணவர்களாகிய நாங்கள் சில நேரங்களில் தவறு செய்தாலும், தண்டனை தரமாட்டீர்கள். காரணம் ஆசிரியராகிய தாங்கள் கண்டிக்கத் தான் செய்வீர்கள் என்ற முறையில் மீண்டும் தங்களை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

உங்களுடைய தமிழ் உணர்வை இன்றைக்கு நாங்கள் பாடமாக எடுத்துக் கொண்டோம். காரணம் 'என்னைப் பாராட்டும் போதாவது தமிழில் பாராட்டக்கூடாதா?', என்று தாங்கள் இங்கே கேட்டீர்கள். 'வைதாலும் தமிழ் கொண்டு வைதிடுக' என்று பாடியதைப் போல், தங்கள் நிலை அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லி தங்களைப் பாராட்டி நன்றி தெரிவித்து வணங்கிடக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, இந்த மேலவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். நேற்றைய தினம் நான் அவரைச் சந்தித்துப் பாராட்டும்போது, ஒன்றைச் சொன்னேன். நான் உங்களிடம் நெருங்கிப் பழகாவிட்டாலும் நேரடியாக நெருக்கம் இல்லாவிட்டாலும், என்னை நீங்கள் நெருங்க விடாவிட்டாலும், நான் உங்களை என்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டுள்ளேன். துரோணாச்சாரியைக் காணாமலேயே குருவாக ஏற்றுக்கொண்ட ஏகலைவனைப் போல் நான் உங்களை குருவாக ஏற்றுக்கொண்டுள்ளேன். உங்களிடம் பெற்ற பாடம் இன்றைக்கு என் வெற்றியைத் தேடித்தந்தது. அந்த வகையிலும் உங்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு துறையில் மட்டுமல்ல. பொதுவாக எல்லாத் துறைகளிலுமே நான் அவரைத் துரோணாச்சாரியாகக் கொண்டு அவர் வழியில் நடந்து வந்திருக்கிறேன். அவர் இன்றையதினம் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் ஒரு சுய நலம் உண்டு. அவரை நான் மிகவும் பாராட்டுவதற்குக் காரணம் அவர் எங்கள் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவர்.

ஆகவே, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அவர்கள் இந்த அவைக்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவிலே, அதை நான் பாராட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த அளவுக்கு எனக்கும் பாராட்டுதலைத் தெரிவிக்க வாய்ப்பு அளித்தமைக்கு தலைவரவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-40)

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Chairman, after having heard a galaxy of speakers highlighting the greatness of our Hon. Chairman and Hon. Deputy Chairman, I was at a loss as to what I could say in my complimentary speech. But, like a diamond which has a shine wherever you turn it, I was enthused to stand here to pay my compliments and my felicitations to Hon. Chairman whom I have known for a number of years. As a great patriot, he claims our respect and gratitude. When I went through his life history, I was reminded that Gandhiji would have formulated his Nai-Talim (New-Education) Basic education only after going through the progress of our Hon. Chairman. Gandhiji had emphasized that education should be vocationalized and vocation should be educationalized. Here is an example of the highest order to show that a person could get educated through a vocation. As one who is proficient in weaving and printing technology, he has shown that it is not through education alone within the four walls of a classroom that one can be educated. When we think of 10 plus two plus three and all that, we talk about vocational training. Here is an example, which should encourage us, to show that our children would prosper well if they have a vocational base in their education. From one who has paid greatest compliment to Indian women in general and women of Tamil Nadu in particular in Silappadhikaram, we are quite confident- (I would not call ourselves as being in a minority) though we are only three women Members here, that is, one-sixteenth of the present strength of this Council-- we can expect equal treatment from our Chairman who is like a Bishma a father figure he I am quite confiden we will catch his eye all the time and he will give us enough opportunity to express ourselves here. I am quite confident that we will be given due representation in this Council.

I have been here for a short while but I was greatly attracted by the repartees and the questions that were asked by Thiru G. Swaminathan, our Hon. Deputy Chairman. When I heard that he had been unanimously elected as Deputy Chairman, my first reaction was only regret, not because he had become Deputy Chairman, but because we would lose the lively discussions that we had in this Council. There was a mention of sending him to



Rajya Sabba. We heard the other day our Vice-President, Hon. Jatti advising the new M. P.'s. that a member should not ask many questions and one should not talk on all subjects, unless one is a specialist. I would suggest that we should send such persons as Thiru Swaminathan to Rajya Sabba where he could prove that there are persons who can specialise in many subjects and who can give constructive suggestions and prove to be good legislators. I congratulate our Hon. Chief Minister and his Colleagues on upholding the tradition of this Council by having unanimity in the choice for filling the posts of Chairman and Deputy Chairman. We have set an example to the whole of India in upholding the tradition of this Council. I take this opportunity of welcoming the new Members, especially my felicitation goes to my young colleague Mrs. Krishnaswami. I wish her all the best and I am sure she will take a very active part in the deliberations. Thank you very much.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களையும், அதே போல ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவையின் துணைத் தலைவர் அவர்களையும் பாராட்டுகின்ற இந்த நிகழ்ச்சி எல்லோருக்கும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருவதாக அமைந்திருக்கிறது. தமிழக அரசின் சார்பாக உங்கள் இருவருக்கும் வாழ்த்துக் கூறுவதற்குமுன், உங்களை ஒருமனதாக இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்க உதவிய அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் நான் என் நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே உங்களைப் பாராட்டியவர்கள் தமிழை முன் வைத்து, தமிழருக்கே உரிய பண்போடு, மற்றவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய நிலையில், பல்வேறான நல்ல கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் கோர்வையாகத் தந்து பேசியிருக்கிறார்கள்.

நான் ஒன்றை இங்கே மன நிறைவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதை எங்கள் கட்சியின் கொள்கை என்றோ, அமைச்சரவையின் ஒருமித்த கருத்து என்றோ கருதாமல் மனதில் கொள்ள வேண்டும். இந்தக் கருத்தை நான் வெளியிடும்போது, அது தனி மனிதனுடைய உள்ளத்திலிருந்து வந்த கருத்து என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் இங்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய தினம் உள்ள அமைப்பில், எந்தக் கட்சி பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் கட்சியிலே இருக்கின்ற ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதும், அவரையே முதலமைச்சராக ஏற்றுக்கொள்வதும், அவர் தனக்கு விருப்பமும்,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 ஏப்ரல் 26

நம்பிக்கையும் உள்ள அல்லது நெருங்கியுள்ள அல்லது அனு
பவம் உள்ளவர்களை, சிந்தித்துப்பார்த்து அமைச்சர்களாக
நியமித்துக்கொள்வதும் வழக்கம். அவர்கள் ஆளுநர் அவர்களால்
நியமிக்கப்படுகிறார்கள் அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.
இதுதான் நடைமுறையில் நடந்துகொண்டிருக்கிறது. என்
னுடைய சொந்தக் கருத்து, முதலமைச்சராக வருகின்றவர்
எந்தக் கட்சியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருந்
தாலும் சட்டப் பேரவையே ஒரு முதலமைச்சரைத் தேர்ந்
தெடுக்கும் நிலைமை உருவாகுமானால் அது நல்லதாகும். அந்த
மாதிரியான ஒரு சூழ்நிலையை உருவாக்கி, அனைத்துக் கட்சிக்கும்
பொதுவான ஒருவரைப் பதவியில் அமர்த்தலாம். அப்படிப்
பட்ட நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். அது தேவை
என்பதுதான் எனது தனிப்பட்ட முறையில் உள்ள ஆசை
யாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அப்படிப்
பட்ட நிலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள்.

[முற்பகல் 11.50]

மேலவைத் தலைவராக இருந்தாலும், சட்ட மன்றப் பேரவைத்
தலைவராக இருந்தாலும், அந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட
பிறகு, கட்சியிலிருந்து விலகி தனித்தன்மையோடு, நாட்டுக்காக
வும் பொதுக் கருத்துகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு
செயல்பட வேண்டுமென்ற நியதியை இந்த நாடும் விரும்பு
கிறது, எல்லோரும் விரும்புகிறார்கள், பேசுகிறார்கள். பதவி
வந்தவுடனே ஒரே நாளில் கட்சியிலிருந்து விலகிவிட வேண்டியது
என்றும், அந்நன ஆண்டுக்காலமாகச் சொல்லி வந்த கருத்தி
லிருந்து வேறுபட்டு வேறு ஒரு கருத்துக்குச் சொந்தக்காரராக
ஆக வேண்டுமென்றும் சொல்லுகிறோம். அத்தகைய மரபு தேவை
யென்றும் சொல்லுகிறோம், அப்படி நடைபெறுகிறது என்றும்
நம்புகிறோம். அப்படித்தான் இருக்க வேண்டுமென்றும் ஆசைப்
படுகிறோம். இது குறித்து ஒரு முன்னுதாரணத்தை இங்கே
சொல்ல விரும்புகிறேன்.

மறைந்த டாக்டர் வி. கிருஷ்ணா ராவ் அவர்கள் சட்டப்
பேரவைத் தலைவராக இருந்தபோது, எனக்கு ஒரு பாராட்டு
நிகழ்ச்சி மதுரையிலே நடக்க இருந்தது. அந்த நிகழ்ச்சிக்குத்
தலைமை தாங்கி அதை நடத்தித் தர வேண்டுமென்று நண்பர்கள்
அவரைக் கேட்டார்கள். அப்போது நான் திராவிட முன்னேற்றக்
கழகத்தில் இருந்தேன். அவர் முன்னாலே எந்தக் கட்சியில்
இருந்தார்களோ, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களோ, மற்றவர்
களோ நடத்துகிற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குத் தலைமை
வகிக்க செல்லக் கூடாது என்று சொன்னபோது அவர் சொன்
னார். ''என்னுடைய கட்சியிலிருந்து விலகிவிட்டேன் என்றாலும்,
கொள்கையிலிருந்து விலகி விட முடியாது என்ற நிலையில் என்



1978 ஏப்ரல் 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மனம் இருந்தாலும் கூட, நான் பொதுத்தன்மையோடு செயல்
பட வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், நான் கண்டிப்பாகச்
சென்றுதான் ஆக வேண்டும்.'' என்ற நியதியை எடுத்துக்
காட்டி அந்த விழாவிலே கலந்துகொண்டு, பாராட்டி, வாழ்த்தி
னார்கள்.

பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும், தமிழக மக்களின்
மனதிலே புத்துணர்ச்சியை ஏற்படுத்தியதற்குக் காரணமாக
இருந்த தாங்கள், எல்லைக் கோட்டை விரிவுபடுத்த வேண்டு
மென்றும், ஒரு பகுதியைத் தமிழகத்திற்குச் சொந்தமாக்க
வேண்டுமென்றும் போராடிய நீங்கள் தமிழகத்திற்குச் சொந்த
மான நீங்கள் பாராட்டுக்குரியவர்கள். தமிழகமெங்கும் உள்ளவர்
களெல்லாம் தங்களைப் பாராட்ட வேண்டுமென்று விரும்பு
கிறார்கள் என்பதை எடுத்துக் கூறுகிறேன். இந்த நேரத்தில்
இந்தியத் துணைக் கண்டத்திற்கே இந்த மேலவை புதிய செய்தியை,
தேவையான செய்தியை, எந்த நேரத்தில் சொல்ல வேண்
டுமோ அந்த நேரத்தில் சொல்லியிருக்கிறது என்பதைக் குறிப்பிட
விரும்புகிறேன். தமிழகத்திலே உள்ள மேலவைக்குத் தலைவராக
ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவர் பதவியேற்ற பிறகு,
''இன்றைக்காவது என்னைத் தமிழிலேயே பாராட்டக் கூடாதா?''
என்று கேட்டது, 'தமிழ் நாடு தமிழை எப்படிக் காப்பாற்ற
விரும்புகிறது, எப்படிப் போற்றுகிறது, எப்படிப் பேணிக்
காக்கிறது, அதை எந்த அளவுக்கு தன்மான உணர்ச்
சியோடு இணைத்துக் கொண்டிருக்கிறது என்பதையெல்
லாம் காட்டுகிறது, அந்த வகையிலே தமிழையே இங்கே
மேலவைத் தலைவராக உட்கார வைத்திருக்கிறோம் என்ற செய்தி
இந்தியத் 'துணைக் கண்டத்திலே இருக்கிறவர்களுக்கு, புரிந்தும்
புரியாமல் இருப்பதைப் போல் மறைத்துக்கொள்ளுகிறவர்
களுக்கும், உண்மையிலே தெரியாமல் இருக்கிறவர்களுக்கும்
நல்ல செய்தியாக இந்த மேலவை தந்திருக்கிறது என்பதைக்
குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. இது சாதாரணமான தகவல்
அல்ல. ஒரு முக்கியமான செய்தி. இந்தச் செய்தி இந்தியத்
துணைக் கண்டம் முழுவதற்கும், மைய அரசிலே பொறுப்பேற்
றிருக்கிற அமைச்சர்களுக்கும், ''ஒரு நல்ல சூழ்நிலையை உரு
வாக்கிக்கொள்ளுங்கள்: தவறான வழியில் சென்று விடாதீர்கள்''
என்று தெரிவிக்கிறது. எந்தக் காரணத்திற்காக எந்தத்
தேவைக்காக எத்தனையோ இளைஞர்கள் தீக்குளித்தார்களோ,
சிறைக்குச் சென்றார்களோ, மாபெரும் தலைவர்கள் எதற்காகத்
துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருந்தார்களோ, அத்தகைய
செயல்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்த
தமிழைக் காத்துத் தீர வேண்டும், வளர்த்துத் தீர வேண்டுமென்ற
கொள்கையின் அடிப்படையிலே இன்றையதினம் தமிழ்
மேலவையினிலே அவையின் தலைவராக உட்கார வைக்கப்பட்
டிருக்கிறது. அந்தத் தமிழ் மேலவையின் தலைவராக உட்கார்ந்தி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 ஏப்ரல் 26

ருக்கிறது என்ற செய்தியை இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அத்தனை பேருக்கும் அறிவிக்கிறது. இந்த மிகப் பெரிய நற்செய்தியை வெளியிட நல்லெண்ணத்தோடும், ஒற்றுமையோடும் இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தமிழக அமைச்சரவையின் சார்பாக நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சிவஞானம் என்ற பெயரிலே உட்கார்ந்திருக்கிறார்கள். சிவம், சைவம் என்றாலே, அறம், தர்மம் என்று பொருள். ஞானம் என்றால் அறிவு, பகுத்தறிவு என்று கொள்ளலாம். பகுத்துப் பார்த்து, சிந்தித்துச் செயல்படுபவர்கள், ஆகவே, அறத்தை அறிவால் காப்பாற்ற சிவஞானம் அவர்கள் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியது.

அதைப்போலவே துணைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் கடவுளாக, காப்பாற்றுகிற நிலையைத் தொடக்கத்தில் கொண்டிருக்கிறார்கள். நாதன் என்பதற்கு காப்பவர் என்று பொருள் உண்டு. அதைப்போல சுவாமி என்பதற்கு கடவுள் என்று பொருள் உண்டு. கடவுளுக்கும் தர்மம் என்றுதான் பொருள். ஆகவே, தர்மத்தைக் காப்பவராக அவர் இருக்கிறார். ஆசானும், சீடனும் ஒன்றாக இருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். அந்த நிலையில் தமிழுக்கும், அறத்துக்கும் அன்போடு பாராட்டுதலையும், வாழ்த்தையும் கூறுகிற நேரத்தில் அரசின் சார்பாக ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அதை உறுதிமொழியாகவும் தர விரும்புகிறேன்.

தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் எந்த சிக்கலான சூழ்நிலையையும், ஆளும் கட்சியிலிருந்து ஏற்படுத்தக் கூடிய நிலைமையில் இங்கே பணியாற்றமாட்டோம். உங்களோடு எந்த அளவுக்கு ஒத்துழைக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒத்துழைத்து, எல்லைக் கோட்டை மீறாமல், பொறுமையோடும், கடமையுணர்ச்சியோடும் பணியாற்றுவோம், ஒத்துழைப்புத் தருவோம் என்று கூறிக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இன்னும் பல நல்ல இளைஞர்கள் வரவிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்கள் வழிகாட்டி, அவர்களும் ஜனநாயகத்தின் எதிரொலிகளாக, நியாயத்தின், தர்மத்தின் அடிப்படைச் சின்னமாக ஆவதற்குக் காரணமாக இருக்க வேண்டும். இளைஞர்கள் சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடிய முறையில் நீங்கள் பணியாற்ற வேண்டுமென்ற ஆசையை இந்த அமைச்சரவையின் சார்பாகவும், இங்கே இருக்கிற அத்தனை பேரின் சார்பாகவும் கூறி, நீங்கள் இருவரும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ வேண்டுமென வாழ்த்தி அமர்கிறேன்.



1978 ஏப்ரல் 26]

(நண்பகல் 12.00)

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் தலைவராகப் பாராட்டு பெறுகிற தாங்கள் ஆறு ஆண்டு காலத்திற்கு முன்னாலே இந்த அவையினுடைய துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்போது பாராட்டு பெற்றீர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூர்கிறேன். அப்படி நினைவு கூர்வதற்குக் காரணம் ஆறு ஆண்டுகள் கழித்து நான் தலைவராக வருவதற்கு அல்ல. வேறு காரணத்திற்காக அதைக் கூறுகிறேன். தாங்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, மிகச் சிறந்த பேச்சாளராகிய தங்களுடைய சிறந்த தமிழ்ப் பேச்சை இனி கேட்க இயலாதே என்ற வகையில் திரு. சந்தோஷம் அவர்கள் சொன்னபோது, நீங்கள் பேசியது தங்களுக்கு நினைவு இருக்குமென்று கருதுகிறேன். துணைத் தலைவராக இருப்பதால், பேசக் கூடாது என்று யார் சொன்னது? மனதில் உள்ளதை சுதந்திரமாகப் பேசுகிற ஆற்றலும் உரிமையும் எனக்கு உண்டு; பேச முடியாமல் போகாது என்று தாங்கள் சொன்னதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தலைவராகத் தாங்கள் இருக்கிறபோது எனக்கும் சுதந்திரமாகப் பேசுகிற வாய்ப்பைத் தாங்கள் அளிப்பீர்கள் என்பதற்கு நீங்களே முன் உதாரணமாக இருந்திருக்கிறீர்கள் என்பதற்காகச் சொல்கிறேன். திரு. சந்தோஷம் அவர்கள் குறைபட்டுக் கொண்டார். துணைத்தலைவராக இருந்து தாங்கள் பேசுவதைக் கேட்டோம்; இன்றைய தினம் தலைவராக ஆகிவிட்டதால், தங்களுடைய பேச்சைக் கேட்கக் கூடிய வாய்ப்பை இந்த அவை இழக்க இருக்கிறது என்றும் குறிப்பாக அவர் இழக்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். திரு. முத்துசாமி பேசும்போது, அதை இன்னும் விளக்கமாகச் சொன்னார்கள். அவையில் பேசாவிட்டாலும், தமிழ்நாடு முழுவதும் சென்று அரசியலுக்கு அப்பால் தமிழ் இனத்தின் மேம்பாட்டிற்கு தாங்கள் பணியாற்றப் போகிறீர்கள், அங்கே தாங்கள் பேசக் கூடாது என்ற பிரச்சினை இல்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது அவைக்குள் தாங்கள் பேசுவதைக் கேட்க முடியாதே தவிர, வெளியே மிக விரிவாக வேகமாக விளக்கமாகப் பேசப் போகிறீர்கள் என்பதை நான் உங்களோடு பழகிய காரணத்தால் அறிவேன். தலைவர் அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டுமென்று விரும்புகிற திரு. சந்தோஷம் அவர்கள் தலைவர் மதுரைக்கு வரும்போது சென்று அவரது பேச்சைக் கேட்க வேண்டும். உறுப்பினர்களாகிய நாங்களும் அந்த வாய்ப்பைப் பெற வேண்டுமென்றும் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1978 ஏப்ரல் 26

திரு. நல்லசிவம், திரு. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் பேசும் போது, இந்த அவையில் ஆளும் கட்சிக்கும் பிரதான எதிர்க் கட்சிக்கும் பேசுவதற்கு தக்க நேரத்தை ஒதுக்கும்போது நலிந்தவர்களாக இருக்கிற அவர்களை மறந்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். நலிந்தவர்கள் என்பதற்குக் காரணம் அவர்கள் ஒரு உறுப்பினர் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நேரத்தைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை அவர்களும் திருவாளர்கள் மாணிக்கம், முத்துசாமி, மீனாட்சிசுந்தரம் ஆகியோரும் எடுத்துச் சொன்னார்கள். நான் துணைத் தலைவராக இருப்பதால், தலைவருடைய சார்பில் அவர்கள் தவறாக நினைக்க மாட்டார்கள் என்று கருதி, ஒன்றைக் கூற விரும்புகிறேன். திரு. ஏ. எஸ். பி. அய்யர் அவர்கள் இந்த மாநிலத்தின் உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்தபொழுது, வெளிநாட்டிலிருந்து சட்டம் தெரிந்த ஒருவர் வந்தார். அவர் நீதிபதியிடம் ''உங்களுடைய இந்து சட்டப்படி பிள்ளைக்கு எவ்வளவு பங்கு'' என்று கேட்டார். அதற்கு, ''தந்தையார் மூதாதையார் சொத்தாக இருந்தால், பிள்ளைக்கு சம பங்கு உண்டு'' என்று நீதிபதி சொன்னார். அடுத்து இந்து சட்டப்படி பெண்களுக்கு எவ்வளவு பங்கு உண்டு என்று கேட்டார். அதற்கு, ''மாப்பிள்ளையின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது அது'' என்று நீதிபதி பதில் சொன்னார். மேலவையைப் பொறுத்தவரையில், சிறந்த முறையில் பேசுகிற திருவாளர்கள் நல்லசிவம், மாணிக்கம், மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் சாமர்த்தியமாக அவர்கள் பேசுகிற நேரத்தை விரிவுபடுத்திக்கொள்ளக் கூடியவர்கள் என்பதை நான் அறிவேன்.

மேலவை இடத்தைப்பற்றி திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் உட்கார்ந்திருந்ததற்கும் இப்போது இங்கே உட்கார்ந்திருப்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனிக்கிறேன். எதிர்க் கட்சியில் இருக்கும்போது, அமைச்சர் பெருமக்களைப் பார்க்கவும் ஆளும் கட்சி உறுப்பினர்களைப் பார்க்கவும் ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர்கள் என்று கணக்குப் போடவும் எப்படிப் பேசினால் எப்படி மடக்கலாம் என்று அங்கிருந்து பார்க்கவும் வாய்ப்பாக இருந்தது. இங்கே ஆளும் கட்சி உறுப்பினராகவும் இல்லாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் தலைவரையும் பார்த்துக்கொண்டு பேசுவது அங்கிருந்து பணியாற்றியதைப் போல இங்கேயிருந்து ஆற்ற முடியாத நிலைமையை உண்டாக்கி இருப்பதைப் பார்க்கிறேன். அப்படி ஒரு நிலையில் தான் இதை அமைத்திருக்கிறார்கள். துணைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய பணியை நல்ல முறையில் ஆற்றுவேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



1978 ஏப்ரல் 26] [திரு. ஜி. சுவாமிநாதன்]

மேலவையின் பாரம்பரியத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடந்த பல ஆண்டுகளாக சிறந்த முறையில் தலைவராக இருந்தவர்களும் துணைத் தலைவராக இருந்தவர்களும், ஆளும் கட்சி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, ஒரு முறையைக் கடைபிடித்து வந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சி வரிசையிலிருந்து பேசும்போது, கட்சி அரசியலுக்குப் பேசுவது ஒன்று; அரசியலுக்கு அப்பாற்பட்டு நின்று சமுதாயத்தின் நலனுக்கு என்று பணியாற்றுவது ஒன்று. எதிர்க் கட்சி உறுப்பினர் தலைவராக இருக்கும்போது, சமுதாய நலனுக்கு உரிய கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் வேறுபாடில்லாமல் என்னுடைய கடமையை ஆற்றுவேன் என்று சொல்லிக்கொள் கிறேன்.

இந்தத் தேர்தலைப் பொறுத்த வரையில், இந்த மன்றத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததற்காக என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுக்கும், திரு. டிமாண்டி அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பெரிய கட்சியைச் சேர்ந்தவர். அவர்களுடைய கட்சியின் சார்பில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க அவர்கள் ஒத்துழைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களுக்கும் முடிவாகவும் முதலாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் என் மனமார்ந்த நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முடிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திரு. ம. பொ. சி. அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு 1947- லிருந்து ஏற்பட்ட தொடர்பாகும். கிட்டத்தட்ட 30 ஆண்டு காலத்திற்கு மேலாக-தலைவர் என்ற முறையில் மட்டுமல்ல, தனிப்பட்ட முறையிலும் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தவன் நான்.

இன்றைய தினம் அவர்கள் தலைவராக இருந்து நான் துணைத் தலைவராக இருப்பதைப் பார்க்கும்போது, நண்பர்கள் சொன்னதைப் போல, இவ்வளவு நாட்களுக்குப் பிறகு தாங்கள் தலைவராகவும் நான் துணைத் தலைவராகவும் இருந்து நல்ல முறையில் சேவை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் வயது முதிர்ந்தவர்கள் என்று சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேலவையில் அதிக நேரம் அமர்ந்து கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்கு மேலாக......

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1976 ஏப்ரல் 26

அடக்கத்தின் காரணமாக என்றால் பேசவே முடியாத நிலை ஏற்படுகிறது ஒன்று மட்டும் தெரிகிறது. நான் இன்னும் பிரச்சினைக்கு உரியவனாகவே இருக்கிறேன் என்பது இங்கே நடந்த பேச்சுக்களிலிருந்து, அதிலும் குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசிய பேச்சிலிருந்து எனக்குத் தெரிகிறது. வெளியேதான் பிரச்சினைக்குரியவனாக இருக்கிறேன். இந்த ஆசனத்தில் தான் இப்போது உட்கார வைத்துவிட்டீர்களே. இன்னமும் பிரச்சினைக்குரியவனாகவே தான் கருதப்பட வேண்டுமா என்பதுதான் எனக்குப் புரியவில்லை, ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; எனக்கு முன்னால் இந்தப் பதவியில் 10 பேர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பேற்ற காலத்தில் என்னைவிட குறைந்த வயதில் பொறுப்பேற்றிருக்கிறார்கள். மிகுந்த வயதில் நான் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிற காரணத்தால், கூடுதலாகவே அந்தப் பதவியில் பொறுப்பைக் காக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மற்றுமொன்றையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். முன்னால் இருந்த தலைவர்களை விட என்னிடம் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது என்று மாண்புகு உறுப்பினர்கள் சொன்னார்கள். எனக்கு முன்னால் வந்தவர்கள் யாரும் ஏதோ ஒரு இயக்கத்திற்குத் தலைமை ஏற்று, அந்தக் கொள்கைகளுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, நாட்டைப் புதிதாகப் படைக்க வேண்டும் என்று பொறுப்பேற்றுக் கொண்டு அந்த நிலையில் இந்தப் பதவியில் அமர்ந்ததாகச் சரித்திரம் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகைய சரித்திரம் படைத்தவனாக நான் வருவதால்தான், பிரச்சினைக்கு உரியவனாகி இருக்கிறேன் என்ற எண்ணம் இயற்கையாகவே ஏற்படச் செய்யும்.

ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் காந்தியத்தில் நம்பிக்கை உடையவன்; நீண்ட நெடுங் காலமாகக் கதர் அணிபவன். காந்தியம் என்றால் நாம் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பது என்பதல்ல, எப்போதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பது என்பதல்ல, அதன் அர்த்தம். சண்டை போடுவதைப் போலவே, காந்தியவாதிக்கு சமாதானம் செய்துகொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். பேச்சை விட செயல்தான் அதிகமாக இருக்க வேண்டும். அந்த வகையில் பேச்சைக் குறைத்துக்கொண்டு செயல் அதிகப்பட வேண்டிய அவசியத்திற்கு வந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு சந்தோஷம் அவர்கள் பேசும் போது, இனிமேல் என்னுடைய பேச்சைக் கேட்க முடியாதே என்று வருத்தப்பட்டுக் கொண்டார். ஏற்கெனவே நான் 'என் பேச்சைக்குறைத்துக் கொண்டு மூன்று ஆண்டுகளாகிவிட்டன.



1978 ஏப்ரல் 26] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

இப்போது அதை நினைவூட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னாலே இருந்த தலைவர் காலத்தில் அவர் சரியாக ஒரு ஆண்டுக் காலம் அவைக்கு வர முடியாது இருந்தபோது, நான்தான் இங்கே தலைவராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். அதற்குப் பிறகும் 2 ஆண்டுக் காலமாக இந்த அவையில் இந்தப் பொறுப்பை ஏற்று இருந்திருக்கிறேன். இப்படி 3 ஆண்டுகளாக இந்தப் பொறுப்பில் இருந்தபோது, பேச முடியாமல் இருந்திருக்கிறேன். எனவே இந்த மூன்று ஆண்டுகளைக் கழித்துவிட்ட பிறகு, இனி அடுத்த ஆண்டுகளைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எது கட்சி, எது கொள்கை என்பதை அனுபவம் காரணமாக நான் அறிந்திருக்கிறேன். அந்த அனுபவத்தால் பிறர் மனம் புண்படக்கூடிய எதையும் இந்த மன்றத்திற்கு வெளியேயும் செய்யாத பண்பாட்டை, விரதத்தை நான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் அறிவுக்குத் தடை போடச் சொல்வது அவசியமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் நிச்சயம் அறிவு பூர்வமாக பிறர் ஒப்புக்கொள்ளும்படி, பிறர் நம்பும்படி நடந்துகொள்ள வேண்டும். அண்ணல் காந்தி அடிகள் அடிக்கடி ஒன்றைச் சொல்வார். ஒருவன் ஒழுக்கமாக வாழ்க்கை நடத்தினால் மட்டும் போதாது. ஒழுக்கமாக நடப்பதாக பிறர் நம்பும்படி சந்தேகிக்கப்படாதபடி நடந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் நான் கட்சி சார்பில்லாமல் இந்த அவையை நடத்துகிறேன் என்றாலும், இதை எல்லோரும் நம்பக்கூடிய வகையில் நடந்து கொள்வேன் என்று கூறிக் கொள்கிறேன்.

ஒரு உறுதியை இந்த அவைக்கு என்னாலே அளிக்க முடியும். ஏற்கெனவே ஓராண்டுக் காலம் நான் அப்படித்தான் நடந்து கொண்டு வந்திருக்கிறேன் என்று நம்புகிறேன். ஒருவேளை குறை இருந்தாலும், இனி அந்தக் குறை தோன்றாத அளவுக்கு நடந்து கொள்வேன் என்ற உறுதியை மட்டும் அளிக்க விரும்புகிறேன்.

மற்றொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே அரசியல் வாதிகள் என்று சொல்லக் கூடியவர்களில் கட்சி வெறி குறைவாக இருப்பவர்களில் முதலாவது ஆளாக நான்தான் இருப்பேன், என் வாழ்நாள் முழுவதும் நான் எந்தக் கட்சியில் இருந்தாலும், எந்தக் கட்சியை நடத்தினாலும், அந்தக் கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று நட்புரிமையை வளர்த்துக் கொண்டிருக்கிறேன் என்பதை எல்லோரும் அறிவர். எதிர்க் கட்சித் தலைவருக்கே நினைவிருக்கும் என்று நம்புகிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1978 ஏப்ரல் 26

இல்லாவிட்டாலும் வயதில் மூத்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். கதர் அணிந்து கொண்டு காங்கிரசில் முன்னணிப் பேச்சாளராக இருந்த காலத்தில்தான், பெரியார் அவர்களோடும் அறிஞர் அண்ணா அவர்களோடும் ஒரே மேடையில் ஏறி தமிழைக் காக்க, இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து, பயங்கரமான தாக்குதல்களைச் சந்தித்தேன். இன்றையதினம் நிலைமை மாறியிருக்கிறது. இப்போது எல்லாரும் இந்தியை எதிர்க்கிற நிலைமையைப் பார்க்கிறோம். அன்றையதினம் அப்படி இல்லை. இருந்தாலும் நான் துணிந்து நின்றேன். தமிழுக்கு ஒரு கேடு வருகிறது என்றபோது தயங்காமல் எதிர்த்திருக்கிறேன். அது மட்டுமல்ல, என்னைப்போன்ற அனைவரையும் தமிழர்களாகவே பார்க்கிற பண்பில் பயிற்சி பெற்றுவிட்டேன். ஆகவே அவர்களைவிட கட்சி எனக்குப் பெரிதாகத் தெரிவதில்லை. ஏதோ ஒரு ஸ்தாபனம் நமக்குத் தேவைப்படுகிறது. ஸ்தாபனம் இல்லாமல் யாரும் எதையும் சாதித்துவிட முடியாது. ஸ்தாபனம் என்று இருந்தால், கட்சி என்று இருந்தால், அது காலப்போக்கில் மாற்றம் அடையத்தான் செய்யும். ஆனால் ஒன்றை மட்டும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன், நான் நேற்றுவரை எந்தக் கொள்கைக்காகப் போராடி வந்தேனோ, எந்தக் கொள்கையை நான் கொண்டிருந்தேனோ அந்தக் கொள்கையை இந்த மண்டபத்திற்கு வெளியே வைத்துவிட்டு உள்ளே வரவில்லை. அப்படி ஒரு அவசியமும் ஏற்படவில்லை. அந்த அடிப்படையிலேதான் இன்றைய தினம்கூட இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டதற்கு முக்கியமான காரணம் நான் எந்தெந்தக் கொள்கைகளுக்காக வெளியே இருந்து பாடுபட வேண்டுமோ அந்தக் கொள்கைகளையெல்லாம் இந்த ஆட்சியும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கை எனக்கு இருப்பதால் தான் இந்த ஆட்சி அந்தக் கொள்கைகளைத் தொடர்ந்து அமல்நடத்தும் என்ற நம்பிக்கை இருப்பதால் தான், நான்போராட வேண்டிய அவசியம் இல்லை, இங்கே நெருக்கமாக இருந்து கொண்டே அவைகளை அடையமுடியும் என்ற எண்ணத்திலேயே இதனை ஏற்றுக்கொண்டேன் வெளியே இருந்தால், அவர்களோடு தொடர்பு அற்றுப் போனால், அவர்களோடு நெருக்கமாக இல்லாமல் போனால், தமிழுக்குப் பணியாற்றும் வாய்ப்பு குறைந்து போகும் என்ற காரணத்தால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்த அழைப்பை ஏற்று, இந்தப் பதவியில் அமர்ந்திருக்கிறேனே தவிர, இந்தப் பதவிமீது ஏற்பட்ட பற்றால் அல்ல. கடந்த 10 ஆண்டுக் காலமாகவும் அப்படித்தான் இருந்திருக்கிறேன். 10 ஆண்டுகளுக்கு முன்னால் போராடிப் போராடித்தான் தமிழகத்திற்கும் தமிழுக்கும் சேவை செய்ய வேண்டியிருந்தது. கடந்த 10 ஆண்டுக்காலத்தில் அப்படியல்ல. போராட வேண்டிய அவசியமே இல்லாமல் ஆட்சியோடு உறவு கொண்டு எதையும் அமுல் நடத்த முடியும் என்ற அனுபவத்தை கடந்த 10 ஆண்டுக்



1978 ஏப்ரல் 26] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

காலத்தில் பெற்றிருக்கிறேன். அந்த அனுபவம் தொடரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டபோது நான் ஒப்புக்கொண்டேன். எல்லோரும் சொன்னதைப்போல், முதலில் எனக்குத் தயக்கமாகத்தான் இருந்தது. ஏனென்றால் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய வழக்கமில்லையே என்ற காரணத்தால். அதிலும் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல், பிரச்சாரத்திற்கு அப்பாற்பட்ட, கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில், எல்லோரையும் சமமாகப் பாவிக்கும் பணியில், என்னை ஈடுபடுத்துவார் என்று எண்ணவே இல்லை. எனவே இந்தப் பெரும் பொறுப்பை அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் தனிப்பட்ட முறையிலான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய அமைச்சர் அவைக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அவையின் முன்னவரும, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இருவருமாகச் சேர்ந்து என்னைக் கைலாகு கொடுத்து அழைத்துவந்து இங்கேஎன்னை அமரச் செய்தார்கள். இந்தச் சடங்கை ஏற்படுத்தியே மதையை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். இருவருமாகச் சேர்ந்து ''ஒன்றும் பயப்படாதீர்கள்; உங்களோடு நாங்கள் இருவரும் ஒத்துழைப்போம்'' என்றுதான் கை கொடுத்து இங்கே கொண்டு வந்து அமர வைத்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். எந்தப் பிரச்சினையிலும் நாங்கள் இருவரும் உங்களுக்குக் கை கொடுப்போம் என்று சொல்லுகிற வகையில்தான் அது அமைந்திருக்கிறது. இருவரும் கை கொடுக்கா விட்டால்தான் கஷ்டம் வந்துவிடும். எனவே ஆளும் கட்சித் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவரும் அந்தக் காரியத்தைச் செய்வதில் உறுதுணையாக இருப்போம் என்ற வகையில், கட்டுப்பாடாக கை கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று நம்பிக்கையூட்டும் வகையில் என்னைக் கொண்டு வந்து இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள்,

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல், இந்த அவையின் உரிமைகளைப் பெருக்குவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அவசியமானால் இது குறித்து பேரவையின் தலைவரோடும் பேச இருக்கிறேன். மேலவையின் உரிமைகளைக் கூடுதலாக்கும் வகையில், தேவைப்பட்டால், அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தாவது செய்ய வேண்டும் என்று எண்ணுகிறேன். 30 ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட அரசியல் சட்டம் நமக்கிருக்கிறது. அதில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள அவசியங்களை

யெல்லாம் எண்ணிப் பார்த்து இந்த அவையின் உரிமைகளைக் கூடுதலாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதைப்பற்றி முதல்வர் அவர்களோடும் பேச இருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால், பேரவைத் தலைவரோடும் பேச இருக்கிறேன்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையின் உரிமைகளை ஏன் அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறேன் என்றால், அதற்கான அவசியம் தற்போது நிரம்ப ஏற்பட்டிருக்கிறது, இந்த அவையில்தான் ஸ்தல ஸ்தாபன ஆட்சியின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இங்கேதான் ஆசிரியர்களின் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளாக உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அமைச்சர் அவையையும் கேட்டுக்கொள்வேன், உள்ளாட்சித் துறை சம்பந்தமான மசோதாக்கள், சட்ட முன்வடிவுகள், கல்வித் துறை சம்பந்தமான சட்ட முன்வடிவுகள்: மசோதாக்கள், அறிவிப்புகள் ஆகியவைகள் இந்த அவையில் கொண்டு வரபபட்டு முதலில் தாக்கல் செய்யப்பட்டால், அது நன்றாக இருக்கும். அந்த அவையிலே முடிவுற்று இங்கே வரும்போது புதிதாக எந்த வாக்குறுதியும் கொடுக்க முடியாது. இந்த அவையில் முதலில் அவைகள் அறிவிக்கப்பட்டு அந்த அவைக்குப் போனால். அதில் குறைபாடு ஏதுமிருக்காது. நான் இங்கே இருந்தும் பார்த்திருக்கிறேன். பேரவையிலும் உறுப்பினராக இருந்தும் பார்த்திருக்கிறேன். குறைந்தபட்சம் கல்வித் துறையைப் பொறுத்த அறிவிப்புகள், சட்ட முன்வடிவுகள், உள்ளாட்சியைப் பொறுத்த சட்ட முன்வடிவுகள், அறிவிப்புகள், மற்றும் கலைத் துறை சம்பந்தமான விஷயங்களைப் பொறுத்தவரையிலாவது இங்கே கொண்டு வரப்பட்டு பிறகு பேரவைக்குச் செல்வது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். எல்லாம் அந்த அவையிலேயே முடிந்துவிட்ட பிறகு இங்கே கொண்டு வருவது என்பது விசேஷ பிரதிநிதித்துவம் கொண்டுள்ள இந்த அவைக்கு அவ்வளவு நல்லதல்ல. இதை நான் இப்போது சொல்லவில்லை. 1952ஆம் ஆண்டு திரு. இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே சொன்னேன். அவரும் அதை ஒப்புக்கொண்டார். 1952 அல்லது 1953 என்று கருதுகிறேன். அப்போதெல்லாம் உள்ளாட்சி மன்றம் பற்றிய சட்ட முன்வடிவுகள், கல்வித் துறை பற்றிய மசோதாக்கள் எல்லாம் இந்த அவையிலே தான் முதலில் தாக்கல் செய்யப்படும். அப்படித்தொடர்ந்து ஒரு 10 ஆண்டுக்காலம் நடைபெற்று வந்தது. 1952 முதல் 1966 வரை கல்வி, உள்ளாட்சித் துறை போன்றவற்றின் மசோதாக்கள் அத்தனையும் இந்த அவைக்குத்தான் முதலில் கொண்டு வரப்படும். ஆனால் என்ன காரணத்தாலோ பின்னாலே இந்த நிலைமை மாறிவிட்டது. அந்த மசோதாக்



கள் இந்த அவைக்கு முதலில் வராத நிலை ஏற்பட்டு விட்டது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர் அவையும் ஆலோசிக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல், பேரவையின் முக்கியத்துவத்தை நாம் குறைக்க விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் இந்த அவையின் முக்கியத்துவத்தை நிலைநாட்ட தேவைப்படுகிற சில உரிமைகளைப் பெறுவதில் பேரவையும் ஒத்துழைக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்து, என்னைப்பற்றிக் குறிப்பிடும்போது, உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 3-வது வகுப்பு மட்டுமே படித்து இந்த ஆரம்பக் கல்வியோடு இந்தப் பதவிக்கு வந்து விட்டேன் என்று குறிப்பிட்டார். எனவே ஆரம்பக் கல்வியே போதும் என்று சொல்வது ஒரு தவறான உதாரணமாகிவிடக்கூடாது என்பதற்காக இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆரம்பக் கல்வி மட்டும் பயின்றாலேகூட ஒருவன் முயற்சித்தால் இந்த நாட்டில் முன்னேறுவதற்கான நல்ல சூழ்நிலை இருக்கிறது என்று சொல்வதுதான் மிகவும் பொருத்தமாகும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு நல்லசிவம் அவர்கள் பேசும்போது, பலகீனமான பகுதியைச் சார்ந்தவர்களுக்கு இங்கே கொஞ்சம் அதிகமான உரிமையைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அந்தப் பலகீனமான **பிரிவை,** பகுதியைச் சார்ந்தவர்களில் நானும் ஒருவன். அதைப் போலவே துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும் பலகீனமான பகுதியைச் சார்ந்தவர்தான். பலகீனமான பகுதியைச் சார்ந்த நானும் அவரும் தலைவராகவும் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம். பலகீனமான ஜாதியைச் சார்ந்தவர்கள்தான் நாங்கள். ஆகவே இதை மறந்துவிட மாட்டோம் என்பதை மட்டும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12—20]

திரும்பவும் இந்த அவை அதனுடைய உரிமைகளை எல்லாம் பெற வேண்டும். இந்த அவையின் அவசியத்தை அதிகமாக்க, அதை உயர்த்துவதற்குண்டான நிலைமைகள் ஏற்படுவதற்கு நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல அபிப்பிராயத்தை, வழிமுறைகளைக் காண வேண்டும். அதைச் செய்யும் போது, மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர்களும் ஒத்துழைக்க வேண்டும். நான் வெறும் அரசியல் வாதி மட்டுமல்ல. இலக்கியத் துறையிலேயும், ஆன்மீகத் துறையிலேயும் நிறைய தொண்டு செய்கின்ற வாய்ப்பு எனக்கு இருப்பதால், என்னுடைய குரல் ஒடுங்கிப் போகின்ற நிலைமையில்லை. என்னுடைய குரல் மறைந்து போவதற்கு அவசியமில்லை. இலக்

## மேலவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரை பகர்தல்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1978 ஏப்ரல் 26

கியத் துறையிலே, ஆன்மீகத் துறையிலே என்றும் இருப்பது போல, இன்றும் எனக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எது கட்சி அரசியல், எது பொது அரசியல் என்பதைப் பிரித்து எடுத்துப் பார்ப்பதற்கு நான் அனுபவம் பெற்றவனாக இருப் பவன். இந்த அவையின் தலைவன் என்ற முறையில், நான் இந்த அவையில் யாருடைய ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல், இந்த அவையை நடத்திச் செல்வேன் என்பதை நான் உறுதி படுத்திக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை விரும்பித் தேர்ந் தெடுத்ததற்காகவும், அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக் காகவும், அதற்கு ஆதரவாக இருந்த அவருடைய கட்சிக்காரர் களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், அவருடைய கட்சித் தலைவர் அவர்கள் இதில் இப்படிப்பட்ட முடிவை எடுத்ததற்காகவும் நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். மற்ற கட்சி உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்த நல்லுணர்வைக் காட்டி என்னைத் தேர்ந்தெடுத்ததன் காரணமாகவே நான் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவனாக ஆகியிருக்கிறேன். இது வரையில் இங்கே மாசு ஏற்படுகின்ற அளவில் இருந்ததாகத் தெரியவில்லை. வெளியில் வேண்டுமானால் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், மாறு பட்ட முறையில் அரசியல் நடத்தியதில்லை. அந்த வழக்கம் எனக்கு என்றும் இருந்ததில்லை. இன்று எதிர்க் கட்சிகளும், மற்ற கட்சி உறுப்பினர்களும் எல்லோரும் சேர்ந்து, என்னையும், துணைத் தலைவர் அவர்களையும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்தது, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, ஒரு புதிய மரபாக இருக்கிறது. நாம் புது மரபுகளைக் கொண்டுவர வேண்டும். பழைய மரபுகளை எல்லாம் நாம் பாதுகாப்பதற்கும், புதிய மரபுகளை நாம் படைப்பதற்கும் உரிய வழி முறைகளை நாம் உருவாக்க வேண்டும். எடுத்ததற்கெல்லாம் 'மே' ஸ் பார்லி மெண்டரி பிராக்டிஸ் என்ற புத்தகத்தைத் திருப்பிப்பார்த்து, அதை வைத்துக்கொண்டு வாதம் செய்வது என்ற முறை யைத்தான் பின்பற்றிக்கொண்டிருக்கிறோம். சில குறிப்பிட்ட இடங்களில் அதையே பின்பற்றுகின்ற முறை இருக்கலாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் நான் சொல்வ தைத் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். நாமும் இந்த அவைக்கு என்று புதிய மரபுகளைப் படைக்க வேண்டும். முன்பு சட்ட மன்றத்திலே ஒரு பிரச்சினை வந்தது. அந்த அவையிலே குறட்டை விட்டுத் தூங்கலாமா என்று பிரச்சினை வந்தபோது, 'தூங்கலாம், ஆனால் குறட்டை விடக்கூடாது' என்று 'மே' ஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸில் சொல்லியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தூங்கினாலும்,



குறட்டை விடாமல், தொந்தரவு கொடுக்காமல் இருந்தால், போதும் என்ற நிலைமையைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே அப்படிச் சொன்னதற்கு காரணம் இருக்கிறது. அப்படிச் சொன்னதற்குக் காரணம், அங்கு (இங்கிலாந்து) அவை இரவில் நடக்கிறது. இங்கே அப்படி அல்ல. பட்டப்பகலில்தான் நடக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் நம் நாட்டில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளில் நமக்கு என்று தனிப்பட்ட மரபுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். பிறநாட்டு மரபுகளை அப்படியே எடுத் துக்கொள்ளாமல், நம்முடைய நாட்டின் பழக்க வழக்கங் களையும், நம்முடைய நாட்டினுடைய கலாச்சாரம், நம்முடைய அரசியல் பாரம்பரியம், நம்முடைய முன்னோர்கள் நமக்குக் காட்டி வைத்துவிட்டுப்போன நல்ல மரபுகள் இவைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும். அதற்கு ஆண்டவன் நமக்கு உதவி புரிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, மீண்டும் ஒரு முறை எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

(பிற்பகல் 12.25)

பின்னர், அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES.

## FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*24th and 26th April* 1978.

VOLUME CLI (Nos. 1 and 2.)

### A


| | Pages |
|---|---|
| ABDUL WAHAB, THIRU K. S. (*Pro tem* Chairman)— | |
| Election of Chairman ... ... ... ... ... | 5–7 |
| Felicitations to Sivagnanam, Thiru M. P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... | 24–26 |
| ARIVAZHAGAN, THIRU K.— | |
| Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... | 14 |
| ARUMUGAM, THIRU S.— | |
| Sworn-in ... ... ... ... .. | 2 |


### C


| | |
|---|---|
| CHAIRMAN, MR.— | |
| Election of Deputy Chairman ... ... ... | 7–8 |
| Election of Sivagnanam, Thiru M. P. as— ... | 5 |
| Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as—and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... ... | 8–57 |

## D

PAGES.

DAMODARAN, THIRU A. R.—

Felicitations to Sivagnanam, Thiru M. P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 22–24

Sworn-in ... ... ... ... ... 2

DEPUTY CHAIRMAN—

Election of Swaminathan, Thiru G. as— ... 7–8

Felicitations to Members elected to the Council ... 1–2

D'MONTE, THIRU D. V.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 30–31

## K

KRISHNASAMY, THIRU K. A.—

Sworn-in ... ... ... ... ... 2

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 35–36

Sworn-in ... ... ... ... ... 2

## M

MANDAKINI KRISHNAMOORTHI, THIRUMATHI—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 40–41



M—*cont.*

PAGES

MANICKAM, THIRU P.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 28–30

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 36–39

MEMBERS OF LEGISLATURE—

Felicitations to Members elected to the Council ... 1–2

MIAKHAN, THIRU J. M.—

Sworn-in ... ... ... ... ... 2

MUTHUSWAMY, THIRU S.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 33–34

Sworn-in ... ... ... ... ... 2

## N

NALLASIVAN, THIRU A.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 26–28

Sworn-in ... ... ... ... ... 2

PAGES

R

RAJA MOHAMMED, THE HON. THIRU K.—

Felicitations to Sivagnanam, Thiru M. P., on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 8–13

RAMACHANDRAN, THE HON. THIRU M. G.—

Felicitations to Sivagnanam, Thiru M. P., on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 41–44

RAMALINGAM, THIRU C.—

Sworn-in ... ... ... ... .. 2

RAMAMURTHI, THIRU K.—

Sworn-in ... ... ... ... ... 2

S

SANKARALINGAM, THIRU M.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 13–19

Sworn-in ... ... ... ... ... 2

SANTOSHAM, THIRU D.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman .. ... 31–33

Sworn-in ... ... ... ... ... 2



S—*cont.*

PAGES

SITHADEVI KRISHNASAMY, THIRUMATHI P.—

Sworn-in ... ... ... ... .. 2

SIVAGNANAM, THIRU M. P.—

Elected as Chairman ... ... ... ... 5

Sworn-in ... ... ... ... .. 2

SUNDARESA THEVAR, THIRU N.—

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and Swaminathan, Thiru G. on his election as Deputy Chairman ... ... 19–22

SWAMINATHAN, THIRU G.—

Elected as Deputy Chairman ... ... ... 7–8

Felicitations to Sivagnanam, Thiru M.P. on his election as Chairman and—on his election as Deputy Chairman ... ... ... ... 45–48

SWEARING-IN OF MEMBERS—

Arumugam, Thiru S. ... ... ... ... 2

Damodaran, Thiru A. R. ... ... ... ... 2

Krishnasamy, Thiru K. A. ... ... ... 2

Lakshmikandhan, Thiru C. R. ... ... ... 2

Meenakshisundaram, Thiru K. ... ... ... 2

Miakhan, Thiru J. M. ... ... ... ... 2

Muthuswamy, Thiru S. ... ... ... ... 2

Nallasivan, Thiru A. ... ... ... ... 2

PAGES.

S—*cont.*

SWEARING-IN OF MEMBERS—*cont.*

**Ramalingam, Thiru C.** ... ... ... ... 2
Ramamurthi, Thiru K. ... ... ... ... 2
Sankaralingam, Thiru M. ... ... ... 2
Santosham, Thiru D. ... ... ... ... 2
Sithadeva Krishnasamy, Thirumathi P. ... ... 2
Sivagnanam, Thiru M. P. ... ... ... 2

12195
V211,32 N78
N78-15152

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-2.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumar Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot., Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

S / 3600

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-1.

67/R.F. R.C./82.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : 　　　　　　　　ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.